R. No. "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

ஞாயிறுதோறும் வெளிவரும். வருடசந்தா உள் நாடு 3-0-0.
ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி. ,, வெளி நாடு 5-0-0.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹூ ஆவணி-மீ 11-உ (26—8—1934) | மலர் 1.

## இனம்! சந்தாதாரர்களுக்கு இனம்!

## அருமையான புத்தகங்கள் இனம்!

நமது "பகுத்தறிவு" பத்திரிகைக்கு செப்டம்பர் மாதம் 1-உயிலிருந்து அக்டோபர் 1-உக்குள் முன்பணம் மணியார்டரில் அனுப்பி புதுசந்தாதாரராய்ச் சேருகிறவர்களுக்கு 8 அணா விலையுள்ள அடியில்கண்ட புஸ்தகங்களில் எது இஷ்டமோ அதை இலவசமாய் புக்போஸ்டில் அனுப்பிக்கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| கைவல்யம் | | 0–8–0 |
| இந்தியாவின் குறைபாடு | | 0–[illegible]–0 |
| இராமாயண ஆராய்ச்சி (அயோத்தியாகாண்டம்) | | 0–8–0 |
| மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை | | 0–8–0 |
| லெனினும், மதமும் | அணா 4 | |
| பொதுவுடமைத்தத்துவம் | ,, 3 | 0–8–0 |
| போல்ஷ்விக் முறை | ,, 1 | |
| கடவுளும் பிரபஞ்சமும் | அணா 4 | |
| சோஷியலிசம் | ,, 3 | 0–8–0 |
| இலங்கை உபந்யாசம் | பை 6 | |
| சமதர்ம உபந்யாசம் | ,, 6 | |

மானேஜர், "பகுத்தறிவு", ஈரோடு.

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 | உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 | சாமிகளின் அடிமை | 0-12-0 |
| விவாக விடுதலை | 0-4-0 | லோகல்போர்டுஆக்...(சென்னை) | 2-0-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 | பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| | | காந்தி-கிட்டு | 0-1-0 |
| The Right of Temple Entry | Re. 1—0—0 | The Curx of the Indian Problem | Re. 1—0—0 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## பகுத்தறிவுக்கழக வெளியீடுகள்.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M. A.

இந் நூல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்ஹாம் நகரத்துப் பாதிரியார் ரெவரெண்ட் ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் எம். ஏ. அவர்கள் பாதிரிகள் பிரமச்சரியம் என்னும் பெயரால் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்து செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

இந்நூலில் மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா? என்தைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

### மத புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். இதில் பல அரிய ஆராய்ச்சியும், சிறந்த அபிப்பிராயங்களும் அடங்கி இருக்கிறன. விலை அணா 4

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், ஈரோடு.



### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக 3-ம் வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் | ரூ. 3—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—

S. லக்ஷுமிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—

சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0

தனிப்பிரதி விலை அணா ஒன்று.

விலாசம்:—

மானேஜர்,

"வெற்றி முரசு" மாயவம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—

வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள், பழைய மூடப்பழக்க வழக்கங்களையும் சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்ம சீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவு ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருடச் சந்தா ரூ 2—8—0.

தனிப்பிரதி விலை 6 பை.

விலாசம்:- மானேஜர்,

"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—

மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடுபடுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0

விலாசம்:—

மானேஜர்,

"நகர தூதன்"

உறையூர், திருச்சி.

# புதிய வாழ்க்கை.

:0:

(தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.)

நமது இந்த உலகத்தைப் போன்று, பிரபஞ்சத்தில் வேறு உலகங்கள் இருக்கின்றனவோ, இல்லையோ என்பது வெறும் உத்தேசமே யொழிய, தெறிந்த விஷயமல்ல. வானநூலோர், கோடான கோடி நட்சத்திரங்கள், ஆவி மேகங்கள், ஒன்பது கிரகங்கள், பல சந்திரர்கள் பிரபஞ்சத்தில் நிறைந்திருப்பதாகத் தெரிவிக்கின்றார்கள். கணக்கிடக்கூடாத பிரபஞ்சப் பொருள்களில், யாதேனும் வொன்றாகிலும், நமது பூமியைப்போன்று, இருப்பதாகச் சொல்ல முடியவில்லை. நமது பூமியிலுள்ள பூதபௌதிக குணங்கள் வாய்ந்த உலகம், ஒன்றாகிலும், எந்த பிரபஞ்ச மூலையிலாகிலும் இருப்பதாக விளங்கவில்லை. இத்தியாதி காரணங்களை நோக்கியே, பிரபல விஞ்ஞானிகள், இந்த ஓர் உலகில் தான், மனிதன் தோன்றிவுள்ளான் என்று, யூகிக்கின்றார்கள். பிரபஞ்சத்தில், இது ஓர் அற்புத நிகழ்ச்சி என்று எண்ணலாம் போலும்! இந்த அறிய சம்பவம் நடந்து, பத்து லட்சம் வருஷம் இருக்கலாமென்று கணக்கெடுத்துரைக்கின்றார்கள். அதற்கு முந்தி, பல கோடி வருஷம், மனிதன் நீங்கலாக, அவனுடைய மிருக மூதாதைகளும், அவைகளுக்கு முந்திய புராதன மூதாதைகளும் வாழ்ந்து வந்தன.

கடந்த பத்து லட்சம் வருஷங்களாக, இம் மனிதனுடைய வாழ்க்கை இவனது மூதாதையர் வாழ்ந்து வந்த வாழ்க்கையை விட, விசேஷமொன்றுமில்லை. பேசத் தெரிந்து கொண்ட விசேஷ மொன்றைத்தவிர, மற்ற வேறெந்த விசேடமும் உண்மையில் காண்பதரிது. உலகில் பூமியும் விளைவும் உணவும் மிகுந்திருந்தும், கோடான கோடி மக்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை. மனித வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் நிறைந்திருந்தும், பெரும்பான்மை மாந்தருக்கு வேண்டிய பொருள்கள், கிடைப்பதில்லை. உலக மக்கள், பேசத்தெரிந்துகொண்டும்,பேசத்தெரியாத மனிதர்,தற்போது இல்லையாயினும், பேச்சால் அறிந்து கொள்ளக்கூடிய உலக விஷயங்களைத்தெரியாத மக்கள்,கோடான கோடிபேர் இருந்து வருகின்றனர். உலகில் வசிக்கப் போதுமான இடமிருந்தும், ஒரு நாட்டார், அயல் நாடுகளைக் கைப்பற்ற, போர் புரிகின்றனர். உணவுக்கும் இருக்குமிடத்திற்கும் போர் புரியும் கொடிய மிருக சீவன்களைப்போல், மனிதனும், போரும் சண்டையும் போடுகின்றான்! இந்த பண்டைக்கால மிருக வாழ்க்கையை, இரண்டொரு திருஷ்டாந்தங்களால் நிரூபிப்பாம்! நேற்று நிகழ்ந்த உலக நெருக்கடியில், மாந்தருக்குப் போதுமான உணவு கிடைக்கவில்லை என்று கோடான கோடி மக்கள் வாடி வதங்கினர். வேலை இல்லாமல், இன்னும் பல கோடி, தெருவில் அலைந்தனர். மக்கள் உலகமெங்கும் வதைந்து வந்தும், நிலத்திற்கும், நீருக்கும் சொந்தக்காரர் என்று வழங்கும் சில வகுப்பார், உணவுப் பொருள்களை, தீக்கிறை யாக்கியது போதாமல், கடலிலும் கொட்டி அழித்தனர்! ஏன் இப்படிச் செய்தார்களெனில், தங்களுக்குப் போதுமான லாபம் கிடைக்க வில்லையாம்! 2000 (Waggons) வாகன்கள் நிறைந்த மெலாம்பழங்களை, மலைசிகரத்திலிருந்து கடலில் கொட்டிஇறைத்தனர்!! இதுவும் ஏனெனில், பழவர்க்கங்கள் அதிகமாக விளைந்து, விலைபடாமல் இருந்தனவாம்! இது மிருக வாழ்க்கையினும் கொடியதன்றோ? இந்த மனித நடத்தைக்குச் சமான வாழ்க்கை, மிருகங்களில் பார்க்க வேண்டுமானால், சில கொடிய மிருகங்களாகிய சிங்கம், புலிகள், கொன்ற ஆட்டையோ, மாட்டையோ, சின்னாபின்னமாய் சண்டையிட்டுக் கிழித்தெறிவது போலாகும். ஏகாதிபத்திய அரசுகளின் தத்தம் பிரஜைகளுக்கு, தத்தம் நாடுகளில் வசிக்கவும், வாழவும் போதுமான இடமும், நிலமும் இருக்க, அயல்நாடுகளைக் கைப்பற்ற போர் புரிந்து மாந்தரை மடியச்செய்கின்றன. 1914-ம் வருஷத்தில் மகா யுத்தத்தின் காரணங்களை, வல்லரசுகள் செய்து கொண்ட ரகசிய உடன்படிக்கைகளைப் படித்தவர்களுக்கு வல்லரசுகளின் பேராசை நன்கு விளங்கும். ஒரு வல்லரசுக்கு, துருக்கருடைய நாட்டையும், மற்றோர் வல்லரசுக்கு, இன்னோர் வல்லரசின் நாட்டையும், மற்றுமோர் வல்லரசுக்கு சில கடலோரதேசங்களையும் பங்கிட்டுக் கொள்வதற்காகப் புரிந்த மாபெரும் சண்டை எனத் தெரிந்து கொள்ளலாம்.

கடந்த பத்து லட்சம் வருஷங்களாக, மனித வாழ்க்கை, மிருக வாழ்க்கையிலிருந்து மாறியதாக எண்ண இடமில்லை. ஒன்றை வொன்று பிடிங்கித்தின்னும் நடவடிக்கை, நாகரீக காலமென்று வழங்கிவரும் நமது காலம் வரை, நிகழ்ந்து கொண்டே வருகின்றது. உலகில் நடந்து வரும் போர்கள், காடு, வனாந்திரங்களில் மிருகங்கள் போடும் சண்டைக்கொப்பாகும். வர்த்தகத்தில் மக்கள் போட்டியிட்டு, ஒருவரை யொருவர் வஞ்சிப்பதும், ஒருமிருகம் மற்றோர் மிருகத்தை வஞ்சித்து, தான் வாழச் செய்துகொள்ளும் உபாயங்களைப் போன்றதே!! தனவந்தர் வீடுகளென்று அழைக்கப்படும் இருப்பிடங்களிலிருந்து,ஏழியோரை அப்புறப்படுத்துவதும், புலி, சிங்கங்கள், குகைகளிலிருந்து மற்ற வலியற்ற மிருகங்களை வெளிப்படுத்துவதே!!! வல்லரசுகள் புரியும் போர்களும் ஒரு குரங்கு கூட்டம், மற்றோர் குரங்குக் கூட்டத்தைக் கொன்று வெற்றி கொள்வதைப் போலாகும். கல்வி கேள்வி இல்லாத மக்கள் கோடிக்கணக்காக இன்றைக்கும் வாழ்ந்து வரும் வாழ்க்கை, ஒன்றிரண்டு என்று எண்ணத்தெரியாதபல கோடிபுழுப்பூச்சி வாழ்க்கையேயாகும். எந்த விதத்தில், மனித வாழ்க்கை, மிருக வாழ்க்கையை விட உயர்ந்ததென்று சொல்லத் துணியக்கூடும்? பேசும் திறமையால், உயர்ந்ததென்று சொல்லலாமா? பேசும் தன்மை, மக்களுக்கு ஒருவாறு உபயோகமாயினும், பதின்மடங்கு கெடுதியை விளைவிக்க ஏதுவாக விருப்பதாகச் சொல்லலாம். கோடான கோடி வருஷமாக இவ்வுலகில் தோன்றாத கற்பனைகள், மனிதன் பேசத்தெரிந்த பிறகே, முளைத்தன. "கடவுள்" "நரகம்", "மோட்சம்", "மறுபிறப்பு", "சீவன்", "ஆன்மா", "பரமாத்மா" முதலிய சமயங்களின் கற்பனைகளும், ஜாதி, வர்ணம் முதலிய சமூக கற்பனைகளும், மனிதன் பேசத்தெரிந்த பிறகே கற்பித்துக்கொண்டான்.தேளுக்குக்கொடுக்கும்,பாம்புக்குவிஷமும் தோன்றியதுபோல், மனிதவர்க்கத்தில், சமயகற்பனைகளும், சாதி கற்பனைகளும் தோன்றியுள்ளன. ஆனால், ஒரு வித்தியாசமுண்டு. அது யாதெனில், தேள் கொடுக்கும், பாம்பின் விஷமும், தன் இனங்களைக் காப்பாற்றிக்கொள்ள வந்த உபாயங்களாகும். ஆனால், மனித வர்க்கத்தில் முளைத்த கற்பனைகளோ வெனில், மனித குலத்தையே நாசமாக்கவும், உபத்திரவம் செய்யவும் வந்த கற்பனைகளே! "உலகில் உதித்த பொருள்களில், மனிதன் வொருவனே கொடுமையானவன்" என்று கவிஞன் சொன்னது ஓர் விதத்தில் உண்மையே. மனிதனுடைய வாழ்க்கை, லோகாயத வாழ்க்கை யாயினும் (Materialistic) அல்லது மானவ வாழ்க்கையாயினும் (Idealistic) அதாவது, கற்பித வாழ்க்கையாயினும், இவனது வாழ்க்கை மிருக வாழ்க்கையே. இதுவே, அவனது பண்டைக்கால வாழ்க்கையாகும். இந்தப் பழமை வாழ்க்கை மாறி, புதிய வாழ்க்கையை அடையுங்காலம் எக்காலம்? அல்லது, இந்தப்பழமைவாழ்க்கையிலேயே மக்கள் இனம் மடியும் வரை, இருந்துவரப்போகின்றானா? இந்த ஆழ்ந்த வினவிற்கு, அறிஞர் கூறும் விடை யாதென வினவுவோம்.

மனிதன், தனது வாழ்க்கையில், எந்த விதத்தில் உயர்ந்தவன் என்று சொல்லக்கூடும்? அதிக விரைவில் செல்வதற்கு ரெயிலும், ஆகாய விமானங்களும் கண்டுபிடித்தான் என்று சொல்லலாமா? பட்சிகள், மணிக்கு 60, 70 மைல் பறக்கின்றன. மான், குதிரை, மணிக்கு 30, 40 மைல் ஓடும் சக்தியைப் பெற்றுள்ளன. பங்களாக்களிலும், மாளிகைகளிலும் வசிக்கின்றானும்! ஆனால், பட்சிகள், வெகு நேர்த்தியான கூண்டுகளில் வசிக்கின்றன. பனி நிறைந்த வடமுனையில் (North Pole) பீவர் என்ற சீவன், கட்டும் அறைகள், மனிதனால் கட்ட முடியாது. தேன் ஈக்கள் கட்டும் அறைகள், என்ன விசித்திரமானவை! ஆயுதங்களை உபயோகிப்பது, மனிதன் ஒருவனுக்குத்தான் தெரியும்? கட்டைகளையும், தழைகளையும், குரங்குகள், தங்கள் எதிரிகள் மேல் எறிகின்றன. பேசத் தெரிந்துகொண்ட வலிமையால், மனிதன், மிருகங்களைவிட அதிகமாக, தன் கைகளுக்கு அகப்படும் பொருள்களை, உபயோகித்துக் கொண்டானேயொழிய, வேறுவித விசேடமொன்றுமில்லை. கல்வி கற்பதால், ஏதாகிலும் வித்தியாசமுண்டோவெனின், சிறு குட்டிக் குரங்குகளுக்கு அதன் தாய்மார்கள், இதைச் செய்யாதே, அதைச்செய் என்று கற்றுக்கொடுக்கின்றன. பட்சிகள், பறக்க, தங்கள் குஞ்சுகளுக்கு தாங்கள், பறந்து காட்டுகின்றன. எலிக்குஞ்சுகளைப் பிடிக்க பூனைகள், பூனைக் குட்டிகளுக்கு கற்றுக்கொடுக்கின்றன. மிருகத்திலிருந்து பெறப்பெற்ற மனிதன், தனது வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி கேள்விகளுக்கு ஆதாரம் மிருகங்களின் வாழ்க்கையிலிருந்தே சிறு பான்மையாக பெறப்பெற்றிருக்கின்றான். இந்த ஆதாரத்தை விருத்திசெய்து பெற்றுக்கொண்டதுதான் இவனுடைய சிறப்பு. ஆதலின், இவனது வாழ்க்கைக்கு ஆதாரம் மிருக வாழ்க்கையே. இந்த வாழ்க்கையை சில விடையங்களில் அபிவிருத்தி செய்துகொண்டான். சில விடையங்களில் தீங்கையும் விளைவித்துக்கொண்டான். மனித வாழ்க்கையில் தீங்கை விளைவித்துக்கொண்ட விஷயங்கள் மூன்று. அவை யாவன:—

முதலாவது பொதுவாக உபயோகிக்க வேண்டிய உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றையும், தனி உடமை ஆக்கியது.

இரண்டாவது, உபயோகித்துவர வேண்டிய பொருள்களின் மேல் லாபம் (Profit) என்ற திட்டத்தை ஏற்றி, இதனை, நிலவரி என்றும், குடிவரி என்றும் வழங்கி, பெரும் பான்மையோருக்கு வாழ்வு

தொடர்ச்சி-18-ம் பக்கம் பார்க்க.

# நரகம் எங்கே?

## வேறு உலகிலா, அல்லது இந்த உலகிலா?

அமெரிக்கப்பகுத்தறிவுச்சங்கப்பிரமுகர் தோழர் மார்ஷர் ஜே. காவின் அவர்களால் எழுதியதின்மொழிபெயர்ப்பு.

(மொழிபெயர்ப்பாளர் சி. நடராஜன்)

அநேக கோடி வருடங்களுக்கு முன்னே-இவ்வுலகம் உற்பத்தி செய்யப்படுவதற்கு முன்னே-முதல் நக்ஷத்திரம் தனது வெள்ளி நிற வெண்மையான கிரணத்தை நிர்மயமான இந்த வானத்தினூடே அனுப்புவதற்கு முன்னே-நுண்ணிய தளிர்களை இளஞ் சூரியனின் கிரணம் முத்தமிடுவதற்கு முன்னே-காற்றினூடே நாம் கேட்டு ஆனந்திக்கும் புள்ளினங்களின் சப்தங்கள் உண்டாவதற்கு முன்னே-மானுஷிக சப்தமே இது வென இவ்வுலகம் அறிவதற்கு முன்னே, இவ்வெல்லையற்ற பரந்தவெளி சுத்த சூனியமாய் குளிர் நிறைந்ததாய் இருள் அடர்ந்ததாய் இருந்த சமயத்தில் இனி சிருஷ்டிக்கப் படும் சகலத்திற்கும் பரம பிதாவாகிய எல்லையற்ற கடவுள் எங்கோ தன்னந்தனியனாய் இவ்வெல்லையற்ற, நாடியற்ற, வெளியில் ஜீவித்திருந்தான். அவன் காரண மற்றவன். அவனுடைய வயதோ அனேக அனந்த காலம் கடந்தது. அவன் அநாதிகாலம் தொட்டு சுத்த சூனியமான எல்லையற்ற ராஜ்யத்தை ஆண்டு வந்தான். நமது கதை ஆரம்ப காலத்தில் அவன் தனது என்றும் அறியா இளமையையும் கடவுள் ஸ்தானத்தின் உச்சஸ் தானத்தையும் அடைந்திருந்தான்; எல்லா வகையிலும் அவன் குறையற்றவனாக இருந்தான். அழகிலோ அவன் "மன்மதன்". அவனது புருவங்களோ உயர்ந்து, கம்பீரமாக இருந்தன. கண்களோ கூர்மையானவையாயும் தன்மை பொருந்தினவைகளாயும் இருந்தன. அன்பிற்கே ஓர் ஊற்று கண்போல் இருக்கும் அவனது இருதயத்தை மறைக்கும் பாவனையாய் அவனது வெண்மையான தாடி மாரளவு வளர்ந்து படர்ந்து நின்றது. நித்தியம் முடிவற்றதன்மை இவைகளுக்கு பிரதான குருவாயும் எஜமானாகவும் இருக்கும் இவன் தன்னந்தனியனாய், நிர்மயமான வெளியினால் சூழப்பட்டு "காலம்" என்னும் அரியாசனத்தில் வீற்றிருந்தான். அது சமயம் தனது தலையை கரத்தில் தாங்கியவனாய் தனது தீர்க்க தரிசன முள்ள கண்களால் அளவிடற்கரிய வருங்காலத்தை நிசப்தமான இவ்வெளியில் காணவே இவ்வுலகை உற்பத்தி செய்ய தீர்மானித்தான்.

இத்தகைய எனது சிருஷ்டிக்கு தோன்றிய ஓர் "கடவுள்" உண்மையாக இருக்கமுடியாதென்று எண்ணுகிறீர்களா? அப்படியானால் என்னால் உருவகப்படுத்தக் கூடிய கடவுள் இல்லையானால் உருவகப்படுத்த முடியாத கடவுள் இருப்பதாகக் கொள்வதும் அறிவிற்கு புறம்பான காலவிரையமே. உருவமற்ற ஒன்றினைப் பற்றிப் பேசுவது அர்த்தமற்ற விஷயம். ஆகவே மேல்ச் செல்லுவோம்.

அவனது உற்பத்தி திட்டத்தில் "கடவுள்" தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

"நான் இப்பரந்த வெளியில் அனேக ஆயிரம்ஜோதி பொருந்திய ஆரியன்களையும், எண்ணற்ற நக்ஷத்திரக்கூட்டங்களையும் கணக்கற்ற சுழலும் உலகங்களையும் நிரப்புவேன். இவ்வுலகினை கணக்கற்ற அழகிய தாவர வர்க்கங்களால் நிரப்புவேன். பக்ஷிகளாலும், மிருகங்களாலும், காடுகளையும், வயல் வெளிகளையும் நிரப்புவேன். இவைகளையெல்லாம் விட எனது சிருஷ்டியில் அதி உன்னதமான மனிதனையும், பெண்ணையும் உற்பத்திசெய்வேன். இவ்வுலகுகளில் ஒன்றை "பூமி" யென்றும் அதனில் வாழ என்னால் சிருஷ்டிக்கப்பட்ட மனித ஆண் பெண்ணையும் "ஆதாம்" என்றும் "ஏவாள்" என்றும் பெயரிடுவேன், வருங்கால மனித சமூகத்திற்கு இவர்கள் தாய்தந்தையாக இருப்பார்கள். அவர்கள் குற்றமற்றவர்களாகவும் பரிபூரணர்களாகவும் இருப்பர். அவர்களுடைய தூய்மையான மனதிலே நன்மை தீமை இதுவென அறியார்கள். ஆனால் அவர்களுடைய மனதிலே அறிவைத் தேடும் ஓர் ஆஸ்த்தையை உண்டு பண்ணி வைப்பேன். அவர்களை ஓர் தோட்டத்தில் அடைத்து, அவர்களின் அருகே, அவர்களுக்கு ஆஸ்த்தையை உண்டு பண்ணக் கூடியதாகவும், அவர்கள் சிக்கிக்கொள்ளக் கூடிய ஓர் பொரியாக அமையக்கூடியதுமான, நன்மை தீமை பொருந்திய, அறிவெனும் மரத்தை நடுவேன். அவர்கள் அம்மரத்தின் பழத்தை தொடக்கூடாது என எச்சரிக்கை செய்வேன். ஆயினும் அவர்கள், அவர்களது அறியாமையினாலும் சந்தர்ப்ப சக்தியின் வேகத்தினாலும் எனது கட்டளையை மீறி விடுவார்களென நான் அறிவேன். அது மாத்திர மல்ல, மனிதசப்தத்துடன் பேசக்கூடியஓர் துஷ்டப்பாம்பை அனுப்பி எனது கட்டளையை மீறச்செய்யக் கூடிய எண்ணத்தை உண்டாக்கச் செய்து நான் அவர்களை என் கட்டளையை மீறச்செய்வேன். இந்த வீழ்ச்சியானது எல்லையற்ற முடிவிற்கு காரணமாக நிற்கும். நான் ஆதாமையும் ஏவாளையும் அவர்களது முடிவற்ற பின் சந்ததிகளாகிய குழந்தைகளையும் வருத்துவதற்காக ஓர் நரகை சிருஷ்டிப்பேன். ஆனால் ஆதாம் ஏவாளின் கணக்கற்ற சந்ததியாரில் ஒரு சிலர் எனது கஷ்டத்தினாலேயே சாயுஜ்யம் அடையச்செய்வேன். முதல் மனிதனும் மகளும் வீழ்ச்சியடைந்த நாலாயிரத்து நாலு வருடங்களுக்குப் பின்னே—நரகத்தின் கதவுகள் தாராளமாகத் திறக்கப்பட்ட பின்னே—மனித சமூகம் எனது இம்சைக் களத்திற்கு வர ஆரம்பிக்கப்பட்ட பின்னே, நான், எனக்கு நானே தந்தையாக ஓர் கன்னிவயிற்றில் உற்பவிப்பேன். மூலையிலுள்ள ஓர் கிராமத்தில் யூத விவசாயிகளினிடையே ஓர் மனிதனாக வளர்வேன். பிறகு மோக்ஷத்திற்குறிய ஓர் சுவிசேஷத்தை போதிப்பேன். என் உடன் இருப்பவரை அற்புதங்களால் ஆச்சரிய மடையச்செய்வேன். உலகத்தின் சாந்த போதனையும் கருணைபங் கடலாகவும் இருப்பேன். எனினும் விரோதிகளின் கோபத்தை அதிகரிக்கச் செய்து நான் சிலுவையில் அறையப்பட்டு நைந்த மனத்தினனாய் வருத்தத்தோடு உயிர்துறப்பேன். இவ்வழியில் என்னால் குற்றமிழைக்கப்பட்ட மனிதன் நரக வேதனையினின்று தப்பி சதாசந்தோஷத்தை அனுபவிக்கத்தக்க மோக்ஷமடையச்செய்து பாவ மன்னிப்பு செய்வேன். ஆனால் இக்காரியங்களை நான் செய்தேன் என்பதில் சந்தேகம் கொண்டாலும் மறுத்தாலும் முடிவற்ற கஷ்டத்திற்கு ஆளாக்குவேன். மேலும்எனது எல்லையற்ற அறிவிற்கு ஓர் அறிகுறியாய் எனது மோக்ஷசிம்மாசனத்திலிருந்து கோடிக்கணக்கான மக்கள் எனது முடிவற்ற துன்பத்திற்காளானதை, எவ்விதமான வருத்தமுமின்றி மன்னிப்பு கொடுத்துவிடும் மனப்பான்மையற்று சாந்தமாய் கவனித்து வருவேன்".

இது தான் கிறிஸ்தவ மதத்தின் ஜீவநாடி. இதை மறுத்தால் கிறிஸ்தவ மதம் பொய்யென்பதாகிறது. தாம் செய்யும் காரியத்தின் ஆரம்பத்தினின்று அதன் முடிவை அறியமுடியாத ஒருவர் எல்லையற்ற அறிவுடையவராகக் கொள்ளமுடியாது. தன் இஷ்டத்திற்குத் தகுந்தாற்போல் சகல விஷயங்களின் முடிவையும் அமைக்க முடியாத ஒருவர் சர்வசக்தனாக கருத முடியாது. அறிவிலும், சக்தியிலும் அளவுடைய ஒருவர் கடவுளாக இருக்க முடியாது. இவ்வண்டமனைத்தும் ஓர் சர்வசக்தனின் ஆக்கினைக்கு ஆட்பட்டிருப்பது மெய்யாயின் அக்கடவுள் எல்லையற்ற முற்காலத்திலேயே தனது முடிவற்ற எதிர்காலத்தில் செய்கையால் ஏற்படக்கூடிய முடிவை உணர்ந்திருத்தல் வேண்டும். ஆகவே மனிதன் வெறுக்கத் தக்கவனாய் இருப்பானேயானால் கடவுளே அவனை வெறுக்கத்தக்கவனாய் செய்துள்ளார். கடவுள் மனித சமூகத்தை இரக்ஷிப்பதற்காக இறந்திருப்பது உண்மையானால், தன்னால் தீங்கிழைக்கப்பட்டவர்களைக் காப்பாற்றவேண்டி தன்னைத் தானே கொலைசெய்துகொண்டவராகத் தான் கொள்ளல் வேண்டும். மனிதன் தன் இச்சைப்படி எதையும் செய்ய சுதந்திரமுள்ளவன் என்ற பழைய சம்பிரதாயப்படியாவது "கடவுள்" குற்ற மற்றவராகக்கருத முடியுமா? ஏனெனில் அவ்வித சுயேச்சையால் மனிதன் எதைச்செய்யக்கூடும் என்பதை கடவுள் உணர்ந்திருத்தல் வேண்டும். கடவுள் இருப்பதை நாம் ஒப்புக்கொள்வோமேயானால் நிகழும் சகலகாரியங்களுக்கும் அவனே காரணஸ்தன் என்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க,

# :: சோவியத் ருஷியாவின் கல்வி நிலை. ::

(சமீபத்தில் ருஷியாவுக்குச்சென்ற ஓர் யாத்திரைக்காரர் எழுதியது.

### எனது ருஷ்யா விஜயம்.

நான் சமீபத்தில் சோவியத் ருஷியாவின் தலைநகரமாகிய மாஸ்கோவுக்கு விஜயம் செய்திருந்தபோது அகில ருஷிய தற்குறித்தன்மை (அதாவது எழுத்து வாசனை அற்ற தன்மை, ஒழிப்புச் சங்கத்தின் தலைமை காரியாலயத்திற்குச் சென்றிருந்தேன். சங்கத்தின் டைரக்டர்கள் என்னுடன் மிகவும் உற்சாகமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சோவியத் ருஷியாவில் கல்வி காட்டுத்தீ போன்று பரவி தற்குறித்தன்மை ஒழிந்து வருகிறதென்பதை ஓர் சிறந்த உதாரணத்துடன் எனக்கு விளக்கிக்காட்டினர். அதாவது தற்குறி ஒழிப்புச் சங்கத்தின் காரியாலத்திற்குச் சமீபத்தில் ஓர் கிழவி வசித்து வந்தாள். அவள் சங்கக் காரியாலயத்தின் முகப்பில் தொங்கிக்கொண்டிருந்த எழுத்துப்பலகையைத் தினந்தோறும் பார்ப்பது வழக்கம். ஆனால் அவளால் பலகையில் என்ன எழுதப்பட்டிருந்ததென்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. கட்டாயத்தின்பேரில் ஓர் கல்விச்சங்கத்தில் அவள் சேரநேரிட்டது. மூன்று வாரங்களில் அவள் அக்ஷரங்களையும், அவற்றைச் சேர்த்து வாசிக்கும் முறையையும் கற்றுக்கொண்டாள். பின்னர் ஒருநாள் தற்குறி ஒழிப்புச்சங்கத்தின் காரியாலய முகப்பிற்கு வந்தாள். முகப்பில் தொங்கிக்கொண்டிருந்த பலகையை உற்று நோக்கினாள். பலகையில் எழுதப்பட்டிருந்த அக்ஷரங்களை அவள் மிகவும் சுலபமாகப்படித்துவிட்டாள் "எனது கல்வி அறியாமைக்கு ஒழிவுகாலம் வந்தது குறித்து நான் சந்தோஷப்படுகிறேன். இதே சமயத்தில் வயோதிகப்பருவம் வரை நான் அறியாமையில் ஆழ்ந்து கிடந்தது குறித்து வருந்துகிறேன்" என்று அக்கிழவி உரத்த குரலில் கூறினாள்.

மேற்கூறியவாறு சோவியத் ருஷியாவில் கல்வி அறியாமை என்னும் இருள் மறைந்து வருகிறதென்பதாக தற்குறி ஒழிப்புச் சங்கத்தின் டைரக்டர்கள் என்னிடம் கூறினர். கல்வி அறியாமையை ஒழிப்பதற்கு அவர்களுடைய சங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் மிகமிகப் பாராட்டத்தகுந்தவை. வயது வந்த இளைஞர்களுக்குள்ளும், யுவதிகளுக்குள்ளும் தற்பொழுது கல்வி மணம் வீசப்பெறாதவர் (தற்குறிகளே கிடையாது.)

### பாமரர்கள் அற்ற ருஷியா.


இந்த 15 வருடங்களுக்குள்ளாக சோவியத் ருஷியாவிலிருந்து அறியாமை அறவே அகன்று விட்டது. 1917ம் வருடத்தில் ருஷ்ய ஜனங்களில் 100க்கு 70 பேர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. சோவியத் சர்க்கார் கடந்த 15 வருடங்களாக தற்குறித்தன்மையை ஒழிப்பதற்கு மிகவும் தீவிரமாக உழைத்து வந்திருக்கின்றனர். அவர்களின் உழைப்பின் பயனாகத் தற்பொழுது ருஷ்யாவில் 100க்கு 26 வீதம்தான் எழுதப்படிக்கத் தெரியாதவர்களிருக்கின்றனர். இவர்களிற் பெரும்பாலர் மிகவும் வயதானவர்களாகவும், ஒதுக்கமான பகுதிகளில் வாழ்ந்து வருபவர்களாகவு மிருக்கின்றனர். இவர்கள் துரதிர்ஷ்ட வசமாகத் தங்களுடைய இளம் வயதில் கல்வி கற்காமலிருந்துவிட்டனர். சோவியத் சர்க்கார் கல்வி கற்காமலிருப்பவர்களுக்குக் கல்வி புகட்டும் பொருட்டு நவீன முறையில் கல்லூரிகள் ஏற்படுத்தி வருகின்றனர். ருஷ்ய நகரங்களின் வீதிகளில் செல்வோமானால், வயதானவர்களும்கூட புத்தகங்களடங்கிய பைகளை எடுத்துக்கொண்டு கல்லூரிகளுக்குச் சென்று கொண்டிருப்பதையும், கல்லூரிகளினின்று திரும்பிக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம். ஒவ்வொரு வீதியிலும் இரண்டு அல்லது மூன்று கல்லூரிகளுக்குக் குறையாமலிருப்பது வழக்கம். கல்லூரிகளின் ஜன்னல்கள் வழியாகப் பார்த்தால் வயதான ஆண்களும், பெண்களும் வரிசையாகத் தத்தம் ஆசனங்களில் அமர்ந்து எழுதிக்கொண்டேனும், வாசித்துக் கொண்டேனுமிருப்பதை நாம் கண்ணுறலாம். இக்காட்சியை நாம்மாலைவேளையிலேயேபார்க்கலாம். ஆயிரக்கணக்கான மாலைப்பள்ளிக்கூடங்கள் ருஷ்யா முழுவதிலும் சிதறிக்கிடக்கின்றன. குடியானவர்கள் தானியங்களை அறுவடை செய்து கொண்டிருக்கும் வயல்களுக்குச் சமீபத்திலும், தொழிற்சாலைகளுக்குச் சமீபத்திலும், செஞ்சேனையைச் சேர்ந்த வீரர்களின் வாசஸ்தானங்களுக்குச் சமீபத்திலும் மாலைப்பள்ளிக்கூடங்கள் ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கின்றன. சுருங்கக்கூறின் இருவருக்கு அதிகமானவர்கள் கூடு மிடத்தில் ஒரு பள்ளிக் கூடத்தைப்பார்க்கலாம்.

### ஸார் மன்னர் ஆட்சியின் எதிரொலி.

இன்றைய ருஷ்யர்கள் கல்வி கற்றுக்கொள்வதற்கு மிகவும் அவலாக இருக்கின்றனர். ஸார் மன்னர்களின் ஏகாதிபத்திய சர்க்கார் கடந்த பல நூற்றாண்டுகளாக ருஷ்ய மக்களை அறியாமையில் ஆழ்த்தியிருந்தனர். அவர்கள் பொது ஜனங்களின் அறியாமையைத் தங்களுடைய நன்மைக்காக உபயோகித்துக் கொண்டனர். ஸார் மன்னர்களிற் சிலர் அரிய சந்தர்ப்பங்களில் இலவசக்கல்லூரிகளை குறைந்த அளவிற்கு ஸ்தாபனம்செய்தனர். பொதுவாக ஸார் மன்னர்களும், அவர்களுடைய கவர்ன்மெண்டாரும் பொது ஜனங்களுக்குக் கல்வி கொடுப்பதால் தங்களுடைய ஆட்சிக்கும், அதிகாரத்திற்கும் ஆபத்து ஏற்படுமென்று அபிப்பிராயப்பட்டனர். ஜனங்கள் கல்வி கற்று விட்டால் சுயேச்சை பெறும் பொருட்டு கிளர்ச்சி செய்வார்களென்றும், ஆதலின் அவர்கள் என்றென்றும் அறிவிலிகளாக விருப்பதே நன்றென்றும் கருதிய ஸார் மன்னர்களின் மனோபாவத்தை என்னென்பது! கல்வி ஞானம் ஊட்டும் விஷயத்தில் பொது ஜனங்களுக்கு ஒரு போதும் மன்னிக்க முடியாத தப்பிதத்தைச்செய்ததினாலேயே அவர்களுடைய ஆட்சிக்குத் திடீரென்று இறுதிக்காலம் வந்து விட்டது. ஸார் மன்னர்களின் மனோபாவம் முதல் அலெக்ஸாந்தர் மன்னரின் கல்வி மந்திரியாக இருந்த ஷிஷ்கோவ் என்பவர் தெரிவித்த அபிப்பிராயத்திலிருந்து நன்கு புலனாகின்றது அவர்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

## சிதம்பரம்—ரங்கம்மாள்.



திருச்சியில் 14-7-34ந் தேதி தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்ற விதவாவிவாகத் தம்பதிகளான தோழர்கள் சிதம்பரம்-ரங்கம்மாள்.

# செட்டிமார் நாட்டில், தோழர் ஈ. வெ. இராமசாமி சுற்றுப்பிரயாணம்.

சுயமரியாதை சமதர்ம இயக்கத் தலைவர் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களும், தோழர்கள் ப. ஜீவானந்தம், எஸ். வி. லிங்கம் ஆகியவர்களும் 10-8-34ந் தேதி காலை கோட்டையூர் ரயில்வே ஸ்டேஷனில் வந்திறங்கினார்கள். அவர்களை தோழர்கள் சிதம்பரம், ரெங்கம்மாள், நா. சின்னையா, நாராயணன், லட்சுமணன், ராம சுப்பையா, தண்ணீர்மலை, அ. பொன்னம்பலம் முதலியவர்களால் வரவேற்று மலர் மாலை சூட்டினார்கள். பிளாட்பாரத்திலேயே ஒரு போட்டோ எடுக்கப்பட்டது. பின்னர் யாவரும் தோழர்கள் ராம, அழ. சிதம்பரம் ரெங்கம்மாள் அவர்கள் இல்லத்தில் விருந்தினராக இருந்தார்கள்-

## விதவா விவாகத்தம்பதிகட்கு விருந்து.

காரைக்குடி முத்துப்பட்டணம் தோழர்கள் ராம சுப்பையா விசாலாட்சி அவர்கள் இல்லத்தில் 10-8-34 மாலை 4மணிக்கு கோட்டையூர் விதவா விவாகத் தம்பதிகளான தோழர்கள் சிதம்பரம் ரெங்கம்மாள் இவர்கட்கு ஒரு பாராட்டு விருந்து நடைபெற்றது. இவ் விருந்துக்கு பல தோழர்கள் தம்பதிகள் சகிதமாக விஜயம் செய்திருந்தார்கள். சென்னை ஊழியன் ஆசிரியர்தோழர் ராய. சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் விருந்து மிகச் சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகட்கு உண்மைநாடுவோர் சங்கத்தார் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் ராம சுப்பிரமணியம், (குமரன் ஆசிரியர்) சொ. முருகப்பர், மு. மரகதவல்லி, எஸ். நீலாவதி, ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் விதவா விவாகத்தைப் பாராட்டிப் பேசினார்கள்- தம்பதிகளும் வரவேற்புக்கும், விருந்துக்கும் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் சி. முரு. நாராயணன் அவர்கள் நன்றி கூற இந்நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு இனிது முடிவடைந்தது.

## பொதுக் கூட்டம்

காரைக்குடி மகார்நோன்புப்பொட்டலில் 10-8-34 மாலை 7 மணிக்கு உண்மை நாடுவோர் சங்க சார்பில் தேவகோட்டை(அட்வொகேட்) தோழர் எஸ். லெட்சுமி ரதன் பாரதி எம். ஏ. பி. எல்., அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கட்கு உண்மை நாடுவோர் சங்கத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரத்தை தோழர் வி. பரமசிவம் அவர்கள் வாசித்துக்கொடுத்தார்.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு நாகபட்டினம் தோழர் அழகர்சாமி கீதங்கள் பாடினார். அதன் பிறகு தோழர்கள் ப. ஜீவானந்தம், எஸ். நீலாவதி, ராம அழ சிதம்பரம், ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் "சமூக முன்னேற்றம்" என்பது குறித்துப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் அ. பொன்னம்பலம் நன்றி கூறக் கூட்டம் 9-30மணிக்கு முடிந்தது.

## தேவகோட்டை.

தேவகோட்டை அட்வொகேட் தோழர் எஸ். லெட்சுமிரதன் பாரதி எம். ஏ. பி. எல். அவர்கள் இல்லத்தில் 11-8-34 மாலை 4-மணிக்கு தோழர்கள் ஈ. வெ. ராமசாமிக்கும் விதவா விவாகத்தம்பதிகட்கும் ஓர்சிற்றுண்டி விருந்து சிறப்பாக நடந்தது.

## பொதுக்கூட்டம்.

இவ்வூர் பந்து விளையாட்டு திடலில் 11-8-34 மாலை 6-30 மணிக்கு தோழர் சங்கரம்பிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கட்கு இவ்வூர் "சமதர்ம சமாஜத்தாரால்" ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலம், ப. ஜீவானந்தம், ராம சுப்பிரமணியம் எஸ். நீலாவதி, ராம அழ. சிதம்பரம் ஈ. வெ.ராமசாமி ஆகியவர்கள் "சமூக முன்னேற்றம்" 'பெண்கள் விடுதலை' சடங்குகள், மதப்புரட்டுகள் என்பது பற்றிப்பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் பாரதி அவர்கள் நன்றிகூற கூட்டம் 9-30 மணிக்கு முடிந்தது.

## விதவா விவாகத்தம்பதிகட்க்கு பாராட்டுவிருந்து.

தேவகோட்டை தோழர் டி. வி. அருணாசலம் அவர்கள் இல்லத்தில் 11-8-34 இரவு 10மணிக்கு தம்பதிகட்கு ஒரு பாராட்டு விருந்து சிறப்பாக நடைபெற்றது. இவ் விருந்துக்கு தோழர் ஈப்பன் பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமை வகித்தார்கள். தோழர்கள் எம். காசிநாதன், மாணிக்கவாசகம், அரு. சோமசுந்திரம், சுப. விசாலாட்சி, எஸ். நீலாவதி, டாக்டர் வர்க்கீஸ், எஸ். லட்சுமிரதன் பாரதி, ஈ. வெ. ராமசாமி முதலியவர்கள் விதவாவிவாகத்தைப்பாராட்டியும், ஷை தம்பதிகளைப்பாராட்டியும் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் தோழர் டி. வி. அருணாசலம் அவர்கள் நன்றிகூறினார்கள்.

## கோட்டையூர்.

இவ்வூர் தோழர் அ. க. அ. சித. வெ. நடராஜன் செட்டியார் அவர்களுடைய இல்லத்தில் 12-8-34ந்தேதி மாலை 5மணிக்கு தோழர்கள் ராம. அழ. சிதம்பரம், ரெங்கம்மாள், தம்பதிகட்கும், ஈ. வெ. ராமசாமி அவர்கட்கும் ஒரு சிற்றுண்டி விருந்து சிறப்பாக நடைபெற்றது. ஒரு புகைப் படமும் எடுக்கப்பட்டது.

## பொதுக்கூட்டம்.

இவ்வூர் ஊரணிக்கரை பக்கமுள்ள ஜவஹர்லால் மேடையில் 12-8-34 ந்தேதி மாலை 6மணிக்கு தோழர் பெரி. நா. லெட்சுமணன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கீதங்கள் பாடினார்கள். இவ்வூர் சமதர்ம சங்கத்தாரால் தோழர்கள் சிதம்பரம், ரெங்கம்மாள், தம்பதிகட்கும், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கட்கும் தோழர்கள் மு. சின்னையா-வள்ளியப்பா இவர்களால் இரண்டு வரவேற்பு உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்து மலர் மாலை சூட்டினார்கள். தலைவர் முன்னுரை கூறியபிறகு தோழர்கள் அ. பொன்னம்பலம், ராம. அழ. சிதம்பரம் ரெங்கம்மாள், எஸ். நீலாவதி, ஈ. வெ. ராமசாமிஆகியவர்கள் "சமூக பழக்க வழக்கம்" சடங்குகள் மதச் செலவுகள் மூடநம்பிக்கை என்பது பற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் 9மணிக்கு முடிந்தது.

## சிவகெங்கை. மாலை பொதுக்கூட்டம்.

இவ்வூர் வாலிப சங்கத்தின் ஆதரவில் அரண்மனைவாசல் முன்பாக 13-8-34ந்தேதி மாலை 6மணிக்கு வக்கீல் தோழர் எம். பொன்னுசாமி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, ராம. அழ. சிதம்பரம் ரெங்கம்மாள் தம்பதிகட்குவாலிபசங்கத்தார் வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார்கள். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலம், ப. ஜீவானந்தம் அழ. சிதம்பரம், எஸ். நீலாவதி, ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் "சமதர்மம்", "ஏழைகள் துயரம்", "கடவுள் கர்மம்" என்பது பற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் இரவு 9-30 மணிக்கு கூட்டம் முடிந்தது. இரவு எல்லோருக்கும் ஒரு விருந்து சிறப்பாக நடைபெற்றது.

## திருக்கோஷ்டியூர்.-

இவ்வூர் நேடிவ்டாக்டர் தோழர் நா. நமச்சிவாயம் அவர்கள் இல்லத்தில் எல்லாத் தோழர்கட்கும் 14-8-34 ந்தேதி காலை 7மணிக்கு ஒரு சிற்றுண்டி விருந்து நடைபெற்றது. இங்கிருந்து மேளவாத்தியங்களுடன் வரவேற்று பொதுக்கூட்டம் நடக்கும் பந்தலுக்கு அழைத்துச் சென்றார்கள். பட்டமங்கலம் தோழர் கோட்டை அம்பலம் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பிறகு தோழர்கள் அ பொன்னம்பலம், ப. ஜீவானந்தன், எஸ். நீலாவதி, ராமசுப்பையா, ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் 'சமூக முன்னேற்றம்" "பொட்டுக்கட்டுதல்" "விபசாரம்" "புராணம் படித்தல்" "சடங்குகள் மதச் செலவுகள்" என்பது குறித்துப் பேசினார்கள். தலைவர் முடிவுரைகூறிய பிறகு புகைப்படம் எடுக்கப்பட்டது. பகல் விருந்து ஒன்று சிறப்பாக நடந்தது. மாலை திருப்பத்தூர் பயணமானார்கள்.

## திருப்பத்தூர் மாலை பொதுக்கூட்டம்.

திருப்பத்தூர் சிவன் கோவில் தேரடிப்பக்கமுள்ள திடலில் 14-8-34 மாலை 6 மணிககு தோழர் நா. பள்ளிகொண்டான் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரை கூறிய பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலம், ராம. அழ. சிதம்பரம், ப. ஜீவானந்தம், எஸ் நீலாவதி, ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் "பகுத்தறிவு" "சமூக விடுதலை" "கல்வி," "சமதர்மம்" "தொழிலாளர்கள் துயரம்" என்பது பற்றி பிரசங்கம் செய்தார்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது முடிவடைந்தது. மாலை சிற்றுண்டி இரவு சாப்பாடும் நடைபெற்றது. ஒரு புகைப்படமும் எடுத்தார்கள்.

## காளப்பூர் பொதுக்கூட்டம்.

இவ்வூர் தோழர்களால் 15-8-34 ந்தேதி காலை 7-30 மணிக்கு ஒரு சிற்றுண்டி விருந்து நடைபெற்றது. 9-30 மணிக்கு அங்கு அமைக்கப்பட்டிருந்த பந்தலில் தோழர் நா. பள்ளிகொண்டான் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள்:— ஈ. வெ. ராமசாமி, எஸ். நீலாவதி, எஸ். வி. லிங்கம், ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம ஆகியவர்கள் "ஜமீன்குடிகள்" "ஏழைகள் துயரம்" ஆண் பெண் சமத்துவம் மதச்செலவு மூடநம்பிக்கை என்பது பற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரை கூறினார். பகல் எல்லோருக்கும் ஒரு விருந்து நடைபெற்றது. யாவரும் மாலை சிங்கம்புணரிக்குப் புறப்பட்டார்கள்.

## சிங்கம்புணரி பொதுக்கூட்டம்.

இவ்வூர் ரிஜிஸ்திரார் ஆபீஸ் முன்பாக 15-8-34ந்தேதி மாலை 6 மணிக்கு இவ்வூர் தோழர் சீனி. ராவுத்தர் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

# இனியாவது புத்திவருமா?

"தீண்டப்படாத மக்கள் என்பவர்களுக்கு ஆலயப்பிரவேசம், என்னும் பேரில் காங்கிரஸ் செய்துவந்த கிளர்ச்சியை அப்போதே நாம் கண்டித்து எழுதிவந்ததுடன்உலகில் கோவில்களேஇருக்கக்கூடா தென்றும் அதற்கு எவருரையும் செல்லிவிடக் கூடாதென்றும் சொல்லியும், எழுதியும் வந்தது யாவரும் அறிந்ததாகும்.

மற்றும் கோவில்களை கள்ளர் குகையென்று கிறிஸ்துவும் கோவில்கள் இடித்து நொறுக்கித் தள்ளப்படவேண்டியது என்று முகம்மதுவும், கோவில்கள் விபசாரிகள் விடுதி என்று காந்தியும் சொல்லியிருப்பதும் யாவரும் அறிந்ததாகும்.

தோழர் காந்தியார் கோவில்களை விபசார விடுதி என்று ஒரு சமயத்தில் சொல்லியிருந்தாலும் இப்போது இரண்டொரு வருஷகாலமாய் அவ் விபசாரவிடுதிக்கு ஆள் பிடித்து விடும் வேலையை விரமாய் செய்து வந்ததுடன் அதற்காக பத்துலக்ஷக்கணக்கான ரூபாய்களையும் திரட்டி வந்ததும் யாவரும் அறிந்ததாகும்.

தீண்டப்படாதாருக்கு அரசாங்கத்தார் அரசியலிலும்உத்தியோகத்திலும் தனித் தொகுதி பிரதிநிதித்துவம் கொடுத்தபிறகுஅதை ஒழிக்கக் கருதிய காந்தியார் தீண்டாதாருக்கு நல்லபிள்ளையாகக் கருதி அவர்களுக்கு கோவில் பிரவேசம் ஏற்பாடு செய்து கொடுப்பதாய் வாக்குக் கொடுத்து அதற்காக ஒரு சட்டம் செய்யவேண்டும் என்று சட்டசபை அங்கத்தினர்களுக்கு உபதேசம் செய்து ஒரு மசோதாவும் கொண்டுவரக்கருதிச் செய்து அதை மற்ற மெம்பர்கள் ஆதரிக்க வேண்டுமென்றும் செய்வதாகவும் சொல்லி அந்தப்படி ஒரு மசோதா கொண்டுவரப்பட்டதும் யாவரும் அறிந்ததாகும்!

அம்மசோதா பொதுஜன அபிப்பிராயத்துக்கு சர்க்காரால் அனுப்பப்பட்ட சமயத்தில் காங்கிரஸ் தலைவர்கள் பண்டித மாளவியா முதற்கொண்டு Dr. ராஜன், சத்திய மூர்த்தி இருதியாக உள்ளவர்கள் "அம்மசோதாஇந்து மதத்துக்கு விரோதம்" என்று சிலரும், அதன்கருத்துஒப்புக்கொள்ளப் படுவதாய் இருந்தாலும் சட்டம் செய்வதுகூடாது" என்றுசிலரும்அபிப்பிராயங்கள் கொடுத்து பிரசாரமும்செய்துவந்ததல்லாமல் கடைசியாக தோழர் ராஜகோபாலச்சாரியார் ஒரு அறிக்கை வெளியிட்டு அதை காந்தியாரையும் ஒப்பச்செய்து அம்மசோதாவின் தலையில் ஒரு அடி அடித்து அதை கச கச வென்று நசுக்கி தள்ளிவிட்டார்கள். அவ்வறிக்கை சாரம் என்னவென்றால்:—

"தீண்டாமைவிலக்கு விஷயத்தில் காங்கிரஸ் எவ்வித அபிப்பிராயங்கொண்டிருந்த போதிலும் ஆலயப் பிரவேச விஷயத்தில் மூன்று விஷயங்களை கவனிக்கவேண்டும்.

1 இந்துக்களல்லாதார் கலந்து ஓட்டுபெற்று மசோதா நிறைவேறுவதை காந்திஜீயும் காங்கிரசுகாரரும் விரும்பவில்லை.

2. மேல் ஜாதி இந்துக்கள் சம்மதமில்லாமல் மத சம்மந்தமான பழக்க வழக்கங்களையோ, சடங்குகளையோ தொடக்கூடாது.

3. காங்கிரசுக்காரர்கள் இம்மசோதாவுக்கு இப்போது எவ்வித அபிப்பிராயமும் கொடுக்கக்கூடாது. இதைப்பற்றி நன்றாய் தீர்க்காலோசனை செய்யவேண்டி இருக்கிறது" என்பது ஆகும்.

இதைக்கண்ட பின்பும்,மாளவியா எதிர்கக்ஷி ஆரம்பித்ததை பார்த்த, பிறகும் தோழர்கள்சத்தியமூர்த்தி, Dr. ராஜன் முதலியோர்கள் சட்டம் செய்யக்கூடாது என்று பிரகாரம் செய்த பின்பும் சர்க்கார் இம் மசோதா விஷயத்தில் அலக்ஷியம் காட்டஆரம்பித்ததும்,பொதுஜன அபிப்பிராயம்சாதகமாயில்லை என்று சொல்லவேண்டி இருந்ததும் கடைசியாக இதை இந்து சமூகம்ஆதரிக்காததால் சர்க்கார் எதிர்க்கவேண்டியவர்களாகி விட்டார்கள் என்று சொன்னதும் ராஜபகதூர் கிருஷ்ண மாச்சாரியார் தீண்டப்படாதாருக்கு மத விஷயங்களில் சமத்துவம் கொடுக்கக்கூடாது என்று சொன்னதும் ஆன காரியங்கள் அதிசயமான விஷயமாகாது. காங்கிரசுத் தலைவர்கள் கருப்பு, (திருட்டு) பாஷையில் பேசினார்கள். சர்க்காரும் ராஜபகதூரும் வெள்ளையான பாஷையில் பேசினார்கள் என்பதைவிட இதில் பிரமாத வித்தியாசமெதுவும் இல்லை.

கடைசியாக தோழர் ராஜகோபாலச்சாரியாரின் சமாதானமானது "குதிரை கீழேதள்ளினதுமல்லாமல் புதைக்கக்குழியும் பரித்தது" என்பது போல் "இந்த அறிக்கை காந்தியாரின் சம்மதம் பெற்றதாகும்" என்றும் சொல்லிவிட்டார். இதிலிருந்து காந்தியார்முதல் சத்தியமூர்த்திவரை தீண்டாதார் விஷயத்தில், சமூக சீர்திருத்த விஷயத்தில், ஜாதி வித்தியாசஉயர்வு தாழ்வு விஷத்தில் கொண்டுள்ள அபிப்பிராயம் என்ன தென்பதை ஜனங்கள் அறிந்து கொள்ள நல்லதொரு சமயம் ஏற்பட்டது என்று தான் கருத வேண்டும்.

எனவே இனியாவது தீண்டப்படாதவர்களாகவும் தீண்டப்படாதவர்களாய் கருதப்படுபவர்களாகவும், தீண்டப்படாதார் என்று ஆதாரங்களிலும் சர்க்கார் தீர்ப்புகளிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கிற வர்களாகவும் இருந்து வரும் மக்களுக்கு புத்திவருமா? அல்லது இன்னமும் "காங்கிரசு" "காங்கிரசு" "காந்தி" "காந்தி" என்று கட்டி அழுது ஈன ஜாதிக்காரர்கள் என்று உலகோர் கருதவும் கல்மேலெழுதவும் அனுகூலமாய் நடந்து கொள்ளுவதையே கருமாய் கருதுவர்களா என்பதே நமது கேள்வி.

---

## மாளவியா

பழங்காங்கிரஸ்வாதி என்று சொல்லப்படும் பண்டித மாளவியா அவர்கள் காங்கிரசின் ஜாதி மத வகுப்பு சம்மதமாய் சமசந்தர்ப்பம் வழங்கும் கொள்கையில் அதிருப்தி கொண்டு அதன் நிருவாகத்தில் இருந்து விலகி தேர்தலில் காங்கிரசுடன் போட்டி போடவும் ஒவ்வொரு தொகுதியிலும் காங்கிரஸ் அபேக்ஷகருக்கு எதிர் ஆளைநிறுத்தி எதிர் பிரசாரம் செய்யவும் தீர்மானித்து எதிர் கக்ஷி அமைத்து விட்டார். இதற்கு காங்கிரஸ் சர்வாதிகாரியாய் இருந்து தோழர் ஆனேயும் சம்மதித்துப் பண்டிதருடன் சேர்ந்து காங்கிரசை எதிர்த்து வருகிறார்.

இதைப்பார்த்த எந்த பார்ப்பனரும், பார்ப்பன ரல்லாதா கூலி பத்தரும், மாளவியாவை தேசத்துரோகியென்றும்காங்கிரஸ் துரோகி என்று கூறவும் இல்லை. இனியும் தேசபக்தர் என்றே தான் அவர்கள் அழைக்கப்படுகிறார்கள். ஆகவே தேசபக்தர் என்றால் யார் என்பதும், தேசத்துரோகிஎன்றால் யார் என்பதும் இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

பார்ப்பன அடிமைகளுக்கும் பார்ப்பனரல்லாதகூலி பிரசாரகர்களுக்கும் பத்திராதிபர்களுக்கும் எலும்புத்துண்டுபோடுகின்றவர்களுந்தான் தேசபக்கதர்கள்காங்கிரஸ் வாதிகள் தேசாபிமானிகள்ஆகிவிடுவார்கள். மற்றவர்கள் தேசத்துரோகி, காங்கிரஸ் எதிரி ஆகிவிடுவார்கள் என்பது தான் அரசியல் அகராதி அருத்தம் போலும்.

## ஆலயப்பிரவேச மசோதா. கருவிலேயே கருகி விட்டது.

இந்திய சட்டசபையில் இருந்த ஆலயப்பிரவேச மசோதா 23ந்தேதி இந்திய சட்டசபை கூட்டத்துக்கு வந்து பொது ஜன அபிப்பிராயம் விரோதமாய் இருக்கின்றது என்கின்ற காரணத்தால் சர்க்காரால் வாப்பீசு வாங்கிக்கொளும்படி கேழ்க்கப்பட்டு அது வாப்பீசு வாங்கிக் கொள்ளப்பட்டதால் அது கருவிலேயே கருகி விட்டது.

## ஆப்கானிஸ்தான் அமீர்.

ஆப்கானிஸ்தானத்தின் அமீராய் இருந்த அமானுல்லா கான் மனித சமூக சீர் திருத்தம் செய்யப் புறப்பட்டதின் பயனாய் அரசுரிமை யிழந்தது யாவரும் அறிந்ததாகும். இன்று துருக்கி வீரர் கமால் பாக்ஷாவும், ஈரான் அரசரும் கலந்து உரவாடியதின் காரணமாய் திரும்பவும் அமனுல்லா ஆப்கன் அரசராகலாம் என துருக்கியில் பலமான பிரஸ்தாபம் இருந்து வருகிறதாம்.

## ராசீபுரத்தில்
# நாயுடுவும்-ராமசாமியும்.

### வாசகசாலை, தேகப்பயிற்சிசாலைத்திறப்புவிழா.

டாக்டர் வரதராஜுலுவும், ஈ. வெ. ராமசாமியும் 25ந்தேதி காலை 9 மணிக்கு ராசீபுரம் வந்து சேர்ந்தார்கள். ராசீபுரம் யூனியன் போர்டிலிருந்து மேளவாத்தியங்களுடன் இவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். பெருங் கூட்டமாக, ஜனங்கள் கூடி, வீட்டுக்கு வீடு நிறுத்தி மாலையிட்டு கற்கண்டு, சந்தனம் வழங்கி வரவேற்று உபசரித்தார்கள்- சேலம், நாமக்கல் டிவிஷன்களிலிருந்து பெரியதனக்காரரும் அசம்பிளி ஓட்டர்களும், அபிமானிகளும் திரளாக வந்திருந்தார்கள். வரவேற்புகளும், வளைவுகளும் வாத்தியங்களும் வாழ்த்துகளும் கண்கொள்ளா காட்சியாக விருந்தென்று கூறுவது மிகையாகாது. ராசீபுரம் முழுதும் பெரும் திருநாளாகவே இருந்தது. விவேகாநந்த தேகப்பயிற்சி சங்கக் கட்டடத் திறப்புவிழாவும், தாகூர் இலவச வாசகசாலைத்திறப்புவிழாவும் டாக்டர் நாயுடு தலைமையில் தோழர் ஈ. வெ. ராமசாமி ஆற்றினர். இருவருக்கும் வரவேற்புப் பத்திரங்கள் பல வாசித்துக்கொடுத்தனர்- சரஸ்வதி விலாசம் எலெக்ட்ரிக் மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மண்டபத்தில் எள்விழ இடமில்லாமல் 2000 பேருக்கு மேல் ஜனங்கள் கூடியிருந்தார்கள். வந்திருந்தவர்களில் கீழ்க்கண்டவர்களும் இருந்தார்கள்:—

தோழர்கள் பி. ஏ. என். காவேரி செட்டியார், வி. மாதாள செட்டியார், பஞ்சாயத்து பிரசிடெண்டு, எம். எஸ். டி. சவுண்டப்ப செட்டியார், பி. வி. மாரிமுத்து செட்டியார், சி. துரைசாமி செட்டியார், சி. சு. கிருஷ்ண செட்டியார், பிரசிடெண்டு யூனியன் கோவாப்ரேட்டிவ் பாங்க் பேளுகுறிச்சி மிட்டாதார் P. சோமசுந்தரம், ந. முத்தியாலுநாயுடு, ஜவுளி கோ. கி. நாராயணசாமி நாயுடு, வி, நாராயணசாமி செட்டியார், எஸ். பி. முத்தைய செட்டியார், எம். எஸ். பி, சுப்பராய செட்டியார், கொ. சொ. அருணாசலப் படையாட்சி, எஸ். டி. அப்பாண்டய்யர், சி. ராமசாமிக் கோனார், மிராஸ்தார்; ஆர். பி. சுந்திரய்யர், ஆர். வி. கிருஷ்ணமூர்த்தி அய்யர் வக்கீல் பி. ஏ. பி. எல்; மா. வெ உடையார் தொ. சி. அ. பெரிமண்ண நாய்க்கர் ஆர். கிருஷ்ணசாமி முதலியார் சி. க. ஆறுமுக செட்டியார், கு. அர்த்தநாரி செட்டியார், டி. ஸ். மைதீன் சாயபு, வர்த்தகம்; செ. அப்பாதுரை செட்டியார், பி. ஓ. சி; அரங்கசாமி உபாத்தியாயர், செ. அங்க முத்து, தேகப்பயிற்சி காரியதரிசி; செ. கு. கிருஷ்ணய்யர், ஆ. பூமாலை உடையார், மிராசுதார், மு. கோபால ஆசாரி, மாஜிசெர்மென்; மு. காவேரி நாயுடு, பனக்கால் சங்க காரியதரிசி, கொ. பெ. திருவேங்கட செட்டியார், இ. ரா. ராமலிங்க செட்டியார், சொ. வ. கிருஷ்ணசாமி செட்டியார், வி. நாராயணராவ், ஆர். வி. ஜெயராம், பி. வி. நஞ்சப்ப செட்டியார், எ. வெங்கிடசாமி நாயுடு, செட்டியண கவுண்டர், காளப்ப நாயக்கன்பட்டி பொன்னுசாமி நாயுடு எ. பாசிகாருலு நாயுடு, ஒ. எம். பொம்மண்ண செட்டியார், என். நைனாமலை செட்டி மாரிமுத்து, இராசீபுரம், ஆர். வி. அங்கண்ண நாயுடு, சி. ரங்கசாமி செட்டியார், எ. ராமசாமி அய்யர் பி. அர்த்தநாரி பண்டாரம் ஆர். வி. வெங்கடசாமி நாயுடு சேலத்திலிருந்து A. சித்தையாரொ சு. அருணாசலம் P. S. கந்தசாமி தொண்டன் R. S. கந்தசாமி மகாபீர் சிங் ஆகியவர்கள் விஜயம் செய்து இருந்தார்கள்.

காங்கிரஸ் ஏமாற்றத்தைப்பற்றியும் சட்டசபைகளின் ஏழைகளின் பேரில் செல்வர்களும் பார்ப்பனர்களும் செலுத்தும் ஆதிக்கத்தைப் பற்றியும் தோழர் ஈ. வெ. ராமசாமி பேசினார்.

டாக்டர் வரதராஜுலு தான் ஏன் காங்கிரஸ்சின் பேரில் நிற்கவில்லை என்பதை விளக்கினார், சுமார் 100 வோட்டர்கள் எல்லோரும் நாயுடுவுக்கே ஓட்டு கொடுப்பதாய் உறுதிசொல்லினார்கள். வந்தனோபசாரம் கூற மீட்டிங் முடிந்தது.

---

## தோழர்
## திரு. வி. க. முதலியார்:

---

தோழர் திரு. வி. கல்யாண சுந்திர முதலியார் அவர்கள் திருச்சிக்கும், ராசீபுரத்துக்கும் வருவதாக பத்திரிகையிலும், துண்டுப் பிரசுரங்களிலும் வெளியானபடி அவர் வரவில்லை. ஆதலால் பார்ப்பனக் கூலிப்பத்திரிக்கைகள் கல்யாணசுந்திரமுதலியார் வரமாட்டார். அவர் பெயரை வேண்டுமென்றே தப்பிதமாய் உபயோகித்துக்கொள்ளுகிறார்கள் என்று எழுதிய வாசகம் உண்மையாய் இருக்கலாம் என்று சிலர் கருதக்கூடும். ஆதலால் நடந்த விபரங்களை எழுதுகின்றோம். ஒரு சுற்றுப்பிரயாணம் ஏற்படுத்த வேண்டுமென்றும், தானும் அதில் கலந்து கொள்ளுவதாகவும் தோழர் முதலியார் அவர்களே பிரஸ்தாபித்ததை ஒட்டித்தான் சுற்றுப்பிரயாணம் பிரஸ்தாபிக்கப் பட்டதென்றும், அவருடைய சம்மதத்தின் பேரிலேயேதான் பத்திரிக்கைகளிலும், துண்டு பிரசுரங்களிலும் பிரஸ்தாபிக்கப் பட்டதென்றும் நாம் நமது தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், அதை நம்பியே தோழர் ஈ. வெ. ரா. ஒவ்வொரு ஊருக்கும் சென்றார் என்றும் தெரிவித்துக்கொள்வதோடு தோழர் முதலியார் அவர்கள் இரண்டு இடத்திற்கும் விஜயம் செய்யாத காரணம் திருச்சிக்கு மூலவியாதி தொந்திரவால் வரவில்லை என்றும், ராசீபுரத்துக்கு வராதது அவரது நெருங்கிய பந்து ஒருவரின் மரணம் காரணம் என்றும் சேதி வந்திருப்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தோழர் முதலியார் அவர்கள் 2-9-34ந்தேதி ஈரோட்டிற்கு அழைக்கப்பட்டிருக்கிறார். அநேகமாய் வரக்கூடும் என்றும் கருதுகிறோம்.

## ஜோலார்ப்பேட்டையில்
# "சமதர்ம"ப் பத்திரிகையும், நாகம்மாள் ஞாபகார்த்த கட்டிடமும் திறப்புவிழா.

—:0:—

"சமதர்மம்" பத்திரிகைத் திறப்பு விழாவை முன்னிட்டும், தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள் ஞாபகார்த்தக் கட்டடத்திறப்பு விழாவை முன்னிட்டும் 5—8—34-ம் தேதி ஜோலார் பேட்டை பெருங் குதூகல ஸ்தலமாக விளங்கியது.

### தோழர்கள் வருகை

இருவிழாக்களுக்கும் தலைமை வகிக்க இசைந்த டாக்டர் பி. வரதராஜுலுவும், திறப்பு விழாக்களை நடத்த இசைந்திருந்த தோழர்கள் திரு. வி. கல்யாணசுந்தரனாரும், சி, டி. நாயகமும், பெங்களூர் எக்ஸ்பிரஸில் சென்னையினின்று ஜோலார்பேட்டை வந்து சேர்ந்தனர்- அதற்கு முன்னரே இங்கு விஜயம் செய்திருந்த தோழர் ஈ. வெ. ராமசாமி, "சமதர்மம்" ஆசிரியர் தோழர் வி. பார்த்தசாரதி முதலியோர் ஷியார்களை ரயில் வேஸ்டேஷனில் எதிர் கொண்டழைத்து மாலை சூட்டி வரவேற்றனர். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கூட்டம் நடைபெறும் இடம்வரை பாண்டு வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

கூட்ட ஆரம்பத்தில் செல்வியர் பத்மாவதியும், ராஜாம்பாளும் சமதர்மகீதத்தை, வெகு இனிமையாகவும், தெளிவாகவும் பாடினர்.

### தலைவர் பிரரேபணை

இக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்குமாறு தோழர் கே. வி. அழகிரிசாமி, டாக்டர் பி. வரதராஜுலு அவர்களை பிரரேபித்துப் பேசினார். பிரரேபணையை ஆதரித்துத் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சுமார் ½ மணி நேரம்பேசினார்

### வாழ்த்துச் செய்திகள்.

பின்னர், தோழர்கள் திவான் பகதூர் பி. முனுசாமி நாயுடு, கெ. எம். பாலசுப்பிரமணியம் பி. எ. பி. எல். சாமி சிதம்பரனார், கோவை பி. எஸ். எம். சங்கரலிங்கம், ஏ ஆர். சிவானந்தம். தூத்துக்குடி முனிசிபல் கௌன்சிலர் கே. ஏ. பி. பெரியசாமி, குடியாத்தம் நகரசபைத் தலைவர் எம். வி. பீமராஜ முதலியார் திருச்சி கே.ஏ பி. விஸ்வநாதம் மல்லிடக்குறிச்சி கே. என். தங்கவேலு, ஆரணி எஸ். அருணகிரி செட்டியார்; எஸ். குருசாமி பி. ஏ. எஸ். ராமசுப்பிரமணியம், திருச்சி, நீலாவதி, சென்னை குஞ்சிதம் முதலியோரிடமிருந்து வந்த வாழ்த்துக் கடிதங்களையும், தந்திகளையும் தோழர் த. பா. நித்தியானந்தம் வாசித்தார்.

### வரவேற்புப்பத்திரங்கள்.

பிறகு"சமதர்மம்" காரியாலயத்தார் சார்பாக டாக்டர் வரதராஜுலுக்கு தோழர் வி. பார்த்தசாரதியும், தோழர் திரு. வி. கல்யாணசுந்தரனாருக்கு, தோழர் த. பா. ஜெயானந்தமும், தோழர் சி. டி. நாயகத்திற்கு ஜதாழர் டி. எம். பார்த்தசாரதியும், ஈ. வெ. ராமசாமிக்கு தோழர் நடேஜனும் வரவேற்புப் பத்திரங்களை வாசித்துக்கொடுத்தனர்-

பின் பெருத்த கரகோஷத்தினிடையே டாக்டர் பி. வரதராஜுலு தலைமை வகித்து தலைமைப்பிரசங்கம்செய்தார். பின் தோழர்திரு.வி.கலியாணசுந்தரனார் "சமதர்மம்" பத்திரிகையைத் திறந்து வைத்து ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்.

### தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள் கட்டிடம்.

தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள் ஞாபகார்த்தக் கட்டிடத்தைத் திறந்து வைத்த தோழர் ஸி. டி. நாயகம் தோழர் நாகம்மாளின் சேவையைக் குறித்தும் கட்டிடத்தின் அவசியத்தைப் பற்றியும்பேசி கட்டிடம் திறந்துவைத்தார். தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் "பொதுவுடமை இயக்கம் சட்டவிரோதமானதென்று சர்க்கார் சட்டம் செய்ததையும் இந்திய சட்டசபை தேர்தலில் பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சியையும் பற்றியும் பேசினார்,

# தேர்தல் பிரசாரம்

## என்னும்

## ஏமாற்றுப் பிரசாரமும், வயிற்றுப்பிழைப்பு வசவுகளும்.

(சித்திரபுத்திரன்)

சித்திரபுத்திரனுக்குப் பழய பாடம்படிக்க நேர்ந்துவிட்டது. இது இஷ்டமில்லாத காரியமானாலும் அது இன்றியமையாததாய் போய்விட்டது! கர்மபலன் யாரைவிட்டது?

இந்திய சட்ட சபைத் தேர்தல் ஆரம்பமாகி விட்டது. இது வேலையில்லா வாலிபர்களின் கஷ்டத்தை ஒருவாறு குறைக்க அநுகூலமாயிருக்கிறது என்று சொல்லலாம். அது போலவே கொள்கையோ, விஷயமோ இல்லாத பத்திரிக்கைகாரர்களுக்கும் ஒரு அளவு கஷ்டம் நீங்கிற்று என்றும் சொல்லலாம். நாட்டுக்கோ, நகரத்துக்கோ ஏழைப்பாட்டாளி மக்களுக்கோ இதனால் ஏதாவது பயன் உண்டா என்று பார்ப்போமானால் தேர்தல்களுடையவும், தேர்தல் முடிவுகளுடையவும் பயன் கடைசியாக "பிச்சை போடாவிட்டாலும் பரவாயில்லை நாயைப்பிடித்துக் கட்டுங்கள்" என்கின்ற மாதிரிக்குத் தான் அதாவது நன்மை ஏற்படாவிட்டாலும் கெடுதியாவது இல்லாமல் இருந்தால் போதும் என்று பிரார்த்திக்க வேண்டிய அளவில் தான் வந்து முடியப் போகின்றதே ஒழிய வேறில்லை என்பது உறுதி.

காங்கிரசும், சுயராஜ்ஜியக் கிளர்ச்சியும், சீர்திருத்த முயற்சியும் ஆகியில் நம் நாட்டில் எப்படி ஏற்பட்டது என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வக்கீல்கள் தங்களது தொழிலை விருத்தி செய்து கொள்ளுவதற்காகத் தங்களைப்பற்றி விளம்பரம் செய்து கொள்ளும் நோக்கத்துடன் பொதுமக்களுக்குத் தங்களைத் தெரியும்படியான மாதிரியில் ஏதாவது கூட்டங்கள் கூட்டுவது, அல்லது கூட்டப்பட்ட கூட்டங்களில் கலந்து கொள்ளுவது அல்லது சற்று பொது ஜன உணர்ச்சியுள்ள வழக்குகளில் தங்கள் பெயர்கள் வரப்பார்ப்பது அல்லது பத்திரிகைகளில் ஏதாவது விஷயங்களைப்பற்றி எழுதுவது அல்லது பத்திராதிபர்கள் தயவை விலைக்குவாங்கி தங்கள் பெயரை அடிக்கடி அவற்றில் வரும்படியாக செய்வது முதலாகிய காரியங்கள் வக்கீல் தொழில் விருத்திக்கு இன்றியமையாதனவாக இருந்து வந்ததுடன் இன்றும் இருந்து வருவதையும் காணலாம்.

தானாகவே நல்ல வரும்படி வரககூடியவர்கள் சிலர் இப்படிப்பட்ட காரியங்களில் கலந்துகொள்ளாமல் இருப்பதையும் பார்க்கின்றோம் என்றாலும் பெரும்பான்மையான வக்கீல்கள் இந்த முறையை அனுசரிக்கின்றார்கள் என்று சொல்வது மிகையாகாது. நமக்குத் தெரிய பல பெற்றோர்கள் தங்கள் குமாரர்களான வக்கீல்களுக்கு இதை உபதேசம் செய்வதையும் பார்த்திருக்கிறோம்.

இந்த உண்மையில் இருந்து இன்றைய எப்படிப்பட்ட வக்கீல் பொதுநல ஊழியர் தேசிய வாதி, ஆகியவர்களும் தப்பித்துக் கொள்ள முடியாது. இந்த முயற்சியில் இருந்து தான் பெரிதும் அரசியல் விஷயங்களும், சீர்திருத்த விஷயங்களும் புறப்பட்டனவே ஒழிய வேறில்லை.

இதன் பயனாக அரசியல் காரியங்களில் அரசாங்கத்தோடு கலந்து கொள்வதற்கு வக்கீல்களுக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்து வந்திருக்கின்றன. அவற்றுள் சில தான் ஸ்தல ஸ்தாபனங்கள், சட்ட சபைகள், அரசாங்க உத்தியோகங்கள், மந்திரி பதவிகள் முதலியனவாகும். அரசியல் முயற்சிகளுக்கு இன்று ஏதாவது நாட்டில் உணர்ச்சி இருந்து வருகின்றது என்று சொல்லப்படுமானால் அது மேல் கண்டவைகளான தேர்தல்கள், உத்தியோகங்கள், பதவிகள் பெறும் பணவருவாய்கள் ஆகியவைகள் காரணமாக தானே ஒழிய பரோபகாரார்த்தத்திற்காகவே மனிதன் வாழவேண்டும்என்கின்ற எண்ணம் காரணத்தால் அல்லவென்று உறுதியாய்ச் சொல்லலாம்- இப்படிப்பட்ட பதவிகளில் ஒன்று தான் இப்போது நடைபெறும் இந்திய சட்டசபைத்தேர்தல் கோஷமாகும்.

இந்தத் தேர்தல் இப்போது வந்தவுடன் உலகத்தை வெறுத்த "துறவிகள்", "சந்யாசிகள்" எல்லாம் வெளியில் வந்து விட்டார்கள்.

"சட்ட சபை மாய்கை" என்றும் "அது ஒன்றுக்கும் உதவாதது" என்றும் "போதிய அதிகாரமும், பொருப்பாக்ஷியும் ஏற்பட்டாலொழிய அதனால் யாதொரு பயனும் இல்லை" என்றும் இன்னும் பலவாராகச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள்இப்போது "காங்கிரசின் கௌரவமும், தேசத்தின் சுயமரியாதையும், காந்தியாரின் பெருமையும்" அதில்தான் (அதாவது இந்திய சட்டசபைத்தேர்தலில் தான்) இருக்கின்றது என்று சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஜஸ்டிஸ் கக்ஷி என்னும் ஜனநாயகக் கக்ஷியார் தங்களுடையது தான் என்று சொல்லிக்கொள்ளும்கக்ஷியும் தங்களுடைய கௌரவமும் தாங்கள் தான் இந்நாட்டு மக்களின் பிரதிநிதிகள் என்பதும் இதில் தான் அடங்கி இருக்கின்றது என்று சொல்ல வேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள். இந்த நிலையில் இந்த இரண்டு கக்ஷியும் ஜனப் பிரதிநிதி கக்ஷி அல்லவென்று உண்மையிலேயே கருதும் சிலர் தனிப்பட்ட முறையிலோ, அல்லது ஏதோ ஒரு பெயரைக்கொண்ட கக்ஷி முறையிலோ இந்திய சட்டசபையின் மூலம் தொண்டாற்றலாம் என்று கருத வேண்டியவர்களாகவும் ஆகிவிட்டார்கள்.

இவற்றையெல்லாம் குற்றம் சொல்லுவதற்காகசித்திரபுத்திரன் இந்தவியாசம் எழுதவில்லை.

மனிதன் இன்றைய உலக வாழ்வில் மேலும்மேலும் மேன்மையும், பதவியும், பணமும், புகழும் அடைய வேண்டும் என்று ஆசைப்படுவது சகஜமேயாகும்.

விவசாயம், வியாபாரம், லேவாதேவி, வக்கீல், வைத்தியம், சம்பள உத்தியோகம் முதலிய தொழில்களில் இருக்கும் நாணயக் குறைவைவிட—அவற்றால் மற்ற மக்களுக்கு இருக்கும் கஷ்ட நஷ்டங்கள் ஏமாற்றங்கள் ஆகியவைகளை விட அவற்றில் நடைபெறும் போட்டிகளின் யோக்கியதைகள், ஒழுக்கக் குறைவுகள், நாணயக்குறைவுகள் ஆகிய எல்லாவற்றையும்விட அரசியல் பட்டம், பதவி, உத்தியோகம் முதலியன சம்பாதிப்பதிலும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக முயற்சிப்பதிலும் காங்கிரஸ் பக்தனாவதிலும் தேசீயம் பேசுவதிலும் அதிகமான நாணயக்குறைவோ, குற்றமோ இருப்பதாகவோ இவற்றில் ஏற்படும் போட்டிகளில் நடக்கும் ஒழுக்க ஈனம் முதலிய காரியங்கள் அதிகமென்றோ மிகவும் தப்பித

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

எதிர் பாருங்கள்! எதிர் பாருங்கள்!!

## எதிர் பாருங்கள்!!!

காங்கிரஸ் சுயராஜ்ஜியக் கக்ஷிக்காரர்கள் முன் ஒரு காலத்தில் இந்தியசட்ட சபையில் செல்வாக்காய் இருந்த போது அங்கு நடந்துகொண்ட மாதிரியும், அவர்கள் சட்டசபை அங்கத்தினர் பதவியை உபயோகித்து பணம்சம்பாதித்த மாதிரியும், தலைவர்கள் என்பவர்கள் சிலர் அந்தப்பணத்தில் பெரும்பாகம் தங்கள்சொந்தத்திற்கு ஸ்வஹா செய்துகொண்ட கதைகளும் பகுத்தறிவில் வரும் நாளை எதிர் பாருங்கள்.

மற்றும் இன்றைய காங்கிரஸ் அபேக்ஷகர்களில் சிலரின் யோக்கியதையையும் அவர்களின் வாழ்க்கையையும் யாருடைய செலவில் அவர்கள் அபேக்ஷகராய் இருக்கிறார்கள் என்பதும் வெளியாகலாம்.

ஏனெனில் காங்கிரஸ் கக்ஷி தவிர மற்றக்கக்ஷி கழுதைக்கு சமானம் என்றும் கரங்கிரசின் பேரால் கழுதை நின்றாலும் அதற்குத்தான் ஓட்டுச்செய்ய வேண்டுமென்றும் சுயமரியாதைக்கக்ஷி சர்க்கார் அடிமைக்கக்ஷி என்றும் தேசத்துரோகக் கக்ஷி என்றும் சொல்லுவதற்குப் பதில் சொல்லுமுகத்தான் அவை வெளியாகும்.

# பகுத்தறிவு.

ஈரோடு 1934- ஆகஸ்டு மீ 26-உ

## "பகுத்தறிவு."

"பகுத்தறிவு" வாரப்பத்திரிகையின் முதல் மாலை முதல் மலர் 26—8—34உ ஞாயிறு வெளியாகின்றது என்றாலும், அதன் கொள்கைகளைப் பற்றி "குடி அரசு", "ரிவோல்ட்", "புரட்சி", "பகுத்தறிவு" (தினசரி) ஆகிய பத்திரிகைகளின் அபிமானிகளுக்கும், வாசகர்களுக்கும் எடுத்துக் கூறவேண்டியதில்லை.

சுருக்கமாக ஒரு வாக்கியத்தில் சொல்லித்தீரவேண்டுமானால் "பகுத்தறிவு" தோன்றலானது, இன்றைய உலக வழக்கில் இருந்து வரும் காரியங்களில் பெரும்பான்மை மக்களால் முதன்மையானதாகவும், இன்றியமையாதனவாகவும் கருதப்படும்,

"எங்கும் நிறைந்த இறைவனை" வழுத்தவோ

"எல்லாம் வல்ல மன்னனை" வாழ்த்தவோ,

"யாதினும் மேம்பட்ட" வேதியனை வணங்கவோ,

"எதும் செய்ய வல்ல" செல்வவானை வாழிய செப்பவோ கருதி அல்ல வென்பதேயாகும்.

மேலும் மனித சமூகத்தில் மௌட்டீயத்தால் ஏற்பட்ட துரபிமானங்களாய கடவுள், ஜாதி, மதம், தேசம், நான், எனது என்பன போன்ற அபிமானங்களை அறவே ஒழித்து மனிதசமூக ஜீவாபிமானத்தையும், ஒற்றுமையையும் பிரதானமாய்க்கருதிஉழைத்து வரும் என்றும் சொல்லுவோம்.

இத்தொண்டாற்றுவதில் "பகுத்தறிவு" வேதத்திற்கோ, விமலத்திற்கோ, சரித்திரத்திற்கோ, சாத்திரத்திற்கோ, பழக்கத்திற்கோ, வழக்கத்திற்கோ, பழமைக்கோ, புதுமைக்கோ அடிமையாகாமல் கொள்வன கொண்டு தள்வன தள்ளி தானே சுதந்தரமாய் தன்னையே நம்பி தனது அறிவையும், ஆற்றலையுமே துணைக்கொண்டு தன்னாலான தொண்டாற்றிவரும்.

முடிவாய்க் கூறுமிடத்து 'பகுத்தறிவு' மனித ஜீவாபிமானத்துக்கு மக்களை நடத்திச் செல்லுமே ஒழிய எக்காரணம் கொண்டும் மக்கள் பின் நடந்து செல்லும்படியான அடிமை வாழ்வில் உயிர் வாழாது என்பதேயாகும்.

## சர். ஆர். கே. ஷண்முகம்

தோழர் ஷண்முகம் அவர்கள் சமீபத்தில் வரப்போகும் இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு ஒரு அபேக்ஷகராக நிற்கின்றார். அவர் சென்னைமாகாண வர்த்தகத் தொகுதிக்கு அபேக்ஷகராய் நிற்க உத்தேசித்திருப்பதாய் தெரிகின்றது. அவர் இப்போது பொது (கோவை, சேலம், வட ஆற்காடு ஜில்லாக்கள்) தொகுதியின் பிரதிநிதியாய் இந்திய சட்டசபைக்குச் சென்று அங்கு அவரது மேன்மையாலும், தகுதியாலும் இந்திய சட்டசபைக்கே தலைவராய், அதாவது கௌரதையில் வைஸ்ராய் பிரபுவுக்கு அடுத்தபடியாய் விளங்குகிறார்.

அவர் காங்கிரசில் பலகாலம் இருந்தவர். சமீபகாலத்தில் அதாவது 1925, 1926-ம் வருடங்களில் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் தமிழ் நாட்டில் காங்கிரசின் பேரால் தனித்து நின்று மேடையேறுவதற்கு தகுதி இல்லாமல் முறியடிக்கப்பட்ட காலத்தில் (தோழர்கள் S சீனிவாசய்யங்கார், சி. ராஜகோபாலாச்சாரியார், சத்தியமூர்த்திமுதலியவர்கள்) தோழர் ஷண்முகம் அவர்களை முன்னணியில் நிறுத்தி அவரது நிழலில் மறைந்துகொண்டு மேடைகளில் ஆள் அடையாளம் தெரியாமல் உட்கார்திருந்ததை இதற்குள் அவர்களும் மறந்திருக்கமாட்டார்கள். பொதுஜனங்களும் மறந்திருக்கமாட்டார்கள். தோழர் ஷண்முகமும் மறந்திருக்க மாட்டார் என்றே நம்புகின்றோம்.

மற்றும் இந்திய சட்டசபையில் தோழர்கள் நேரு, பட்டேல் முதலிய "மாபெருந்தலைவர்கள்" இருந்து வந்தகாலத்திலேயே தோழர் ஷண்முகம் அவர்கள் இந்திய சட்டசபை காங்கிரஸ் கக்ஷி கொறடாவாக்அதாவதுகக்ஷியின் கௌரவத்தைக் காப்பாற்றும் பொருப்பாளியாக இருந்து வந்ததும் அது இன்றைய காங்கிரஸ் சரித்திரத்தில் "சுந்திர காண்டமாக" இருந்து வருவதும் யாவருக்கும் தெரிந்ததும் ஒருவராலும் மறுக்க முடியாததுமாகும்.

அதே தகுதியும், பெருமையும், சாமர்த்தியமும் அவரை இன்று இந்திய சட்டசபைத் தலைவராக ஆக்கி விட்டதுடன் இன்னமும் மேலான பெரும், பதவியும் அவரை மணந்து மணம் பெறக் காத்திருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் தோழர் ஷண்முகத்தின் கௌரவமும் சாமர்த்தியமும் கீர்த்திப் பிரதாபமும் இந்தியா வெங்கும் பரவி இருப்பதுடன் வெளி தேசங்களிலும் தானாக பரவத்தலைப்பட்டதில் அதிசயமொன்றுமில்லை. இதை ஒடுக்கவும், மறைக்கவும் தென்னாட்டுப் பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிக்கைகளும் மற்றும் வெளி மாகாணங்களில் உள்ள பார்ப்பனர்களும் செய்து வந்த விஷமப்பிரசாரங்களும் திண்ணைப் பிரசாரங்களும் கணக்குவழக்குக்கு மீறியதாய் இருந்து வந்ததும், தோழர் ஷண்முகத்துக்கும் தோழர் ஸ்ரீனிவாசய்யங்காருக்கும் நடந்துவந்த வாதப் பிரதிவாதங்களும் 1926, 27 வருஷத்திய குடி-அரசைப் பார்ப்பவர்களுக்கு கண்ணாடி போல் விளங்கும்.

அக் காலங்களில் காங்கிரசின் பேரால் பார்ப்பனர்கள் பிரசாரங்களுக்கு வெளியில் சென்று மேடையேறினால் இவர்களது யோக்கியதைகளை உணர்ந்தவர்களான ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாதார்கள் இவர்களை கேழ்விகள் கேட்டு திணர வைத்துவிடுவார்கள். இப்படி இரண்டு மூன்று இடத்தில் நடந்ததும் பிறகு தோழர் ஷண்முகத்தை முன்னால் நிருத்தி சரமாறியான கேள்வி அம்புகளுக்கெல்லாம் பதில் சொலலும்படி செய்வார்கள். அப் பதில்கள் எவ்வளவு மழுப்பலானதாக இருந்தாலும் கூட தோழர் ஷண்முகம் பார்ப்பனரல்லாதார் என்பதற்காக கவனியாமல் விட்டு விடுவார்கள். இப்படியே சுற்றுப்பிரயாணம் நடக்கும்.

உண்மைகள் இப்படி இருந்தபோதிலும் பார்ப்பனரல்லாத பத்திரிகைகளில்மாத்திரம் "சரமாரியான கேள்விகளுக்கு ஆணித்தரமான பதில்களை தோழர் சத்தியமூர்த்தி அய்யர் கொடுத்து வாயடக்கி விட்டார்" என்று சிறிதுகூட மானம், வெட்கம், உண்மை இல்லாத சேதிகள் வெளிவரும்.

மற்றும் தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் மேடை யேறியதும் பல வித மரியாதைகள் நடந்து உடனே இறங்கி விடுவார். பிறகு தோழர் ஷண்முகம் 1 மணி 1-30 மணி நேரம் பேசுவார் ஆனால் பத்திரிகைகளில் தோழர் சத்தியமூர்த்தி பேசியதாக 3½கலமும் தோழர் ஷண்முகத்துக்கு 2½ வரியும் தான பேசிய சேதிகள் வரும். இவைகள்யெல்லாம் அப்போதே! எப்போதே? தோழர் ஷண்முகம் தேச பக்தராய், காங்கிரஸ் வாதியாய், தேசிய கட்சி கொறடாவாய், பண்டிட் மோதிலால் நேரு அவாகளின் வலக்கையாய், தென்னாட்டு அரசியல் பிரசாரப் பார்ப்பனர்களின் காப்பாளராய் இருந்த காலத்தில் நடந்த சங்கதிகள் என்றால் இப்போது! எப்போது? தென்னாட்டுப் பார்ப்பனர்கள் கண்ணுக்கும் மனத்திற்கும் வயிற்றிற்கும் பெரு நெருப்பாய் இருக்கின்ற காலத்தில் இந்தப் பார்ப்பனர்களும், அவர்களது கூலிகளும், மற்றும் பச்சகானுக்களும், அரைடிக்கட்டுகளும், பார்ப்பனர்களுக்கு கவிபாடி வயிர் வளர்க்கும் வயிற்றுப் பிழைப்பு பத்திரிக்கைகளும் என்ன தான் பேசாது எதைத்தான் எழுதாது என்பதைப்பற்றி நாம் அறிவாளிகளுக்கு எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

கொஞ்ச காலத்திற்கு முன் ஒரு பார்ப்பன போட்டிப் பரிசுப் பத்திரிக்கை விகட வேஷம் போட்டுக்கொண்டு ஷண்முகம் அவர்களின் ஜாதியைக் குறிப்பிட்டு போக்கிறித்தனமாகவும் விஷமத்தனமாகவும்படம் போட்டு கேவலப்படுத்தி இருந்ததும், அதை சில பார்ப்பனரல்லாத பத்திரிக்கைகள் கண்டித்துப் பல கேள்விகள் கேட்டதும், கேட்ட கேள்விகளுக்கு நாளது வரை பதில் சொல்லாமல் சுய பாஷியம் கூற வந்ததும் யாவருக்கும் தெரியும். மற்றும் பல பாப்பனர்களும் அதே முறையில் அதை

ஒட்டியே தங்கள் விஷத்தை கக்கிக்கொண்டிருப்பதும் யாவரும் அறிந்ததாகும்.

இவை ஒருபுரமிருக்க. இன்று தோழர் ஷண்முகம் இந்திய சட்டசபைக்கு அங்கத்தினராய் மறுபடியும் நிற்பதைப்பற்றி பார்ப்பனர்களும், அவர்களது பத்திரிக்கைகளும் எறிகின்ற நெருப்பில் எண்ணெ விட்டதுபோல வயற்றெரிச்சல் படுவது சகஜமேயாகும். ஏனெனில் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் அல்லாதார் ஒருவர் பார்பனர் எவரும் அடையாத பெருமையை அடைந்து விட்டார், இனியும் அடையப் போகிறார் என்பதை கண்டவர்களும், கேட்டவர்களும் பார்ப்பனராயிருந்தால் ஆத்திரப்படாமல்— ஏன்?— தற்கொலைகூட செய்துகொள்ள முயற்சியாமல் இருக்க முடியுமா? ஆனால் பார்ப்பனரல்லாதார்களால் தங்களை பார்ப்பனக் கூலிகள் என்று சொல்லிக்கொள்ளவோ பிறர் சொல்லுவதை பொருத்துக்கொள்ளவோ சகிக்காதார்களும்ஏன் ஆத்திரப்படவேண்டும் என்பது நமக்குவிளங்கவில்லை.

### அவரது குற்றம் என்ன?

தோழர் ஷண்முகம் பேரில் இன்று பார்ப்பணர்களும், அவர்களது கூலிகளும் சொல்லும் குற்றங்கள் இரண்டே இரண்டு, அவைகளில் ஒன்று ஒட்டாவா காரியத்தில் கலந்திருந்தது. இரண்டு ஷண்முகம் தனது தொகுதியாகிய கோவை, சேலம், வட ஆற்காடு ஜில்லாக்களின் தொகுதிகளில் நிற்காதது.

இவற்றில் ஒட்டாவா விஷயமோ அது ஒரு பாட்டி கதை. அது முடிவுபெற்று அமுலுக்கு வந்து அவற்றின் பலனை ஜனப்பிரதிநிதித்துவ இந்திய சட்டசபை சரி என்று ஒப்புக்கொண்டுவிட்டது. மற்றும் தோழர் ஷண்முகம் அவர்கள் அந்தக் காலங்களிலேயே அது சம்பந்தமான பிரச்சினைகளுக்குத்தக்க பதிலும் அளித்து இருக்கிறார்.

இன்றும் அந்த கொள்கை அதாவது ஒட்டாவா விஷயத்தில் தான் நடந்துகொண்டதானது சரியா தப்பா என்பதை பந்தயம் போட்டு நிரூபிப்பதற்காகவே விவசாயக்காரர்களை பெரும் பகுதியாய் கொண்ட தொகுதியை விட்டு விட்டு பொருளாதார— வர்த்தகத் தொகுதியில் தைரியமாய் அபேக்ஷகராக நிற்கிறார். அந்த கதைகளைப் பற்றி இனியும் பேசுவோமானால் பழய குப்பையைக் கிளறுவதாகும்:—

ஒட்டாவா ஒப்பந்தம் என்பது இந்தியாவின் பணக்காரர்கள், வியாபாரிகள் ஆகியவர்களாகிய நூத்துக்கு பத்து பேர்கள்கூட அல்லாதாரைப் பொறுத்த விஷயமே தவிர மனித சமூகத்தில் 100-க்கு 90 பேர்களாகிய ஏழைகள் அதாவது வயற்றுக்கு பற்றாத—கூலிக்கு உழைக்கும் பாட்டாளிகள், தீண்டப்படாதவர்கள், கீழ் ஜாதிக்காரர்கள் என்பவர்கள் முதலாகிய கூட்டத்தார்களைப் பொறுத்ததல்ல. ஒட்டாவ ஒப்பந்தத்தால் இந்திய வியாபாரம் பாதிக்கப்படுவதாக வைத்துக் கொள்ளலாம். அதில் பணக்காரர்களின் பணம் தான் கொள்ளை போகலாமே தவிர—பணக்காரர்களுக்கு அவர்களுடைய ஆடம்பர அட்டூழியங்களுக்கேற்ற லாபம் தான் கொள்ளை போகலாமே தவிர ஏழைகள் பணம் கொள்ளைபோவதில்லை. அப்படித்தான் மீறி இன்றைய நிலையில் ஏழைகள் பணம் கொள்ளைபோவதாய் இருந்து இன்னமும் அவர்கள் பட்டினி கிடந்து சாகும்படியான நிலைமை வருமானால் கூட நாம் அதற்காக கலங்கமாட்டோம். ஏன்? சீக்கிறத்தில் ஏழைகளுக்குப்புத்தி வந்துஅவர்கள் கஷ்டங்களுக்கு விமோர்சனம்ஏற்படக்கூடிய நிலைமை வருமென்றுகருதிவரவேற்போம். அந்தப்படி ஏற்பட்ட நாடுகளில் தான் ஏழை மக்களுக்கு சீக்கிரம் விமோசனம் ஏற்பட்டு பொருளாதார விஷயத்தில் உள்நாட்டான் அடிக்கும் கொள்ளையும் வெளிநாட்டான் அடிக்கும்கொள்ளையும் நின்று இருக்கின்றது என்பதை அறிவோம். இன் நிலையில் இன்று இந்நாட்டு மக்களை வெளி நாட்டார் பட்டினி போடுவதும் ஒன்றுதான் உள் நாட்டான் பட்டினி போடுவதும் ஒன்று தான்.

மற்றபடி தேசாபிமானத்தைப் பற்றி பேசுவதென்றாலோ அது இதைவிட மோசமான காரியம் அதன் வண்டவாளங்களைப்பற்றி பின்னால் மற்றொரு சமயம் பேசுவோம்.

நிற்க தீண்டாமை விஷயங்களிலும்ஜாதி உயர்வு தாழ்வு விஷயங்களிலும் இன்றைய மற்ற அபேக்ஷகர்கள்—காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்கள் நடந்துகொண்ட யோக்கியதையைவிட தோழர் ஷண்முகம் நடந்து கொண்டது மேலா கீழா என்பதை யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம்.

சோடிக்கணக்கான மக்கள் அதுவும் பாடுபட்டு உழைக்கும் மக்கள் இந்நாட்டில் தீண்டாதாராய் கீழ் ஜாதியாராய் பட்டம் பெற்றிருப்பது கொடுமையா அல்லது ஒரு சில பணக்கார முதலாளிக்கு லாபம் குறைந்து போவது கொடுமையா என்பதை யோசித்தால் ஒட்டாவா கூப்பாட்டின் யோக்கியதை விளங்காமல் போகாது.

குருகுலப் போராட்டத்தில்—மக்கள் அதுவும் குழந்தைகள் யாவரும் சமமாய் பாவிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியதும் காங்கிரஸ் கமிட்டியில் ராஜினாமா கொடுத்து விட்டு ஓடின வீரர்கள் இன்று தலைவர்களாகவும், அபேக்ஷகர்களாகவும இல்லையா?. பொட்டுக் கட்டுவதை — பார்ப்பனரல்லாத பெண்களில் ஒரு சாரார் மீது சுமத்தப்பட்ட விவசாரத்தன்மையை ஒழிக்கக்கூடாது என்ற வீரர் ஒருவர் இன்று அபேக்ஷகராக இல்லையா? ஜாதி மதங்களை ஒழிக்கக்கூடாது என்று வாதம் புரியும் வீரர் ஒருவர் இன்று அபேக்ஷகராக இல்லையா? இப்படிப்பட்ட இவர்கள் மனித சமூகத்திற்கே வேண்டாதவர்களாயிருக்க மனிதர்களின் பிரதிநிதிகளாய் தலைவர்களாய் இருக்க யோக்கியதை உடையவர்களானால் தோழர் ஷண்முகம் பிரதிநிதியாய் இருப்பதில் யாருக்கு என்ன முழுகிப்போகும்? எந்த விதத்தில் இந்நாட்டு மக்களுக்கு கேடோ, அவமானமோ ஏற்பட்டுவிடும்? என்று கேட்கிறோம்.

இரண்டாவது, தோழர் ஷண்முகம் தனது தொகுதியில் நிற்கவில்லை என்பது.

தோழர் ஷண்முகத்தை அவரது தொகுதி என்பது இன்றும் கைகாட்டி அழைத்துக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் தோழர் ஷண்முகம் இதுவரை அதற்கு இணங்காததானது இந்தப் பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் தன்னைப் பொருளாதார விஷயத்தில் இந்திய வர்த்தகத்துக்கு கெடுதி செய்து விட்டதாகச் செய்து வரும் விஷமப்பிரசாரத்தைப் பொய்ப்பித்து அவர்களது முகத்தில் கரியைத்தடவி அவர்களின் யோக்கியதையைத் தமிழ் மக்களுக்கு விளக்கிக்காட்டுவதற்காகவே வியாபாரிகள்—பொருளாதார நிபுணர்கள் ஆகியவர்களுடைய தொகுதியிலேயே நிற்க வேண்டும் என்கின்ற ஆசையாலேயே ஒழிய வேறில்லை என்றே நினைக்கிறோம்.

இன்றும் நாம் தோழர் ஷண்முகத்திற்கு ஒரு யோசனை சொல்லுவோம் அதாவது சேலம், கோயமுத்தூர், வட ஆர்க்காடு தொகுதியில் நிற்கவேண்டுமேன்றே சொல்லுவோம். இது கிராமவாசிகள் விவசாயிகள் ஆகியவர்களையே பெரிதும் கொண்ட தொகுதியானாலும் அவர்களைக்கூட இந்தப் பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் ஏமாற்றிவிட முடியாது என்று நாம் கோபுரத்தின்மீதிருந்து கூவுவோம்.

மேலும் கோவை, சேலம், வட ஆர்க்காடு ஜில்லாக்கள் சேர்ந்தஇந்தியசட்டசபைத்தொகுதியில் இன்று இருபது ஆயிரம் ஓட்டர்கள் இருப்பார்களானால் அதில் பகுதி முனிசிபல் டவுன் ஓட்டர்கள் ஆவார்கள். அவர்கள் கிராமவாசிகளைவிட விஷயங்கள் தெரிந்தவர்களாயிருப்பார்களே தவிர மோசமானவர்களாக இருக்க

---

# திருமணம்.

ஈரோடு குடி அரசு ஆபீஸ்
சப் எடிட்டர் தோழர்
**அ. சங்கரையாவுக்கும்**

ஈரோடு தோழர் K. பாப்பம்மாள்
அவர்கள் குமாரத்தி தோழர்
**கனகாபாயிக்கும்**

2—9—34 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ஈரோட்டில் ஈரோடு முனிசிபல் கௌன்சிலர் தோழர் S. R. கண்ணம்மாள் அவர்களின் சிங்காரவனத்தில் திருமணம் என்னும் வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் நடைபெறும்.

தோழர்கள் வரவு ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

K. பாப்பம்மாள்,
பெண்பாடசாலை உபாத்தியாயர்.
26—8—34.

ஈ. வெ. ராமசாமி.

மாட்டார்கள். இந்தத் தொகுதியில் உள்ள எல்லா முனிசிபாலிடிகளும் தோழர் ஷண்முகத்துக்கு வரவேற்பு கூறி பாராட்டி இருப்பது இரண்டு கண்ணும் அற்ற குருடன் கூட அறிவான். கோவை ஜில்லா போர்ட்டு தவிர மற்ற எல்லாஜில்லா போர்டுகளும் தோழர் ஷண்முகத்தை வரவேற்றுப்பாராட்டி இருப்பதும் யாவரும் அறிந்ததாகும். கோவை ஜில்லா போர்டிலும் கூடகுறுகியநோக்கம் கொண்ட சிலரின்பொறாமை காரணமாகவும், பார்ப்பனர்களுக்கு உள்பட்டிருந்தாலொழிய தாங்கள் மேன்மை பெற முடியாது என்று சந்தேகப்பட்டவர்கள் காரணமாகவும் அது பாக்கி இருக்கின்றதுஎன்றுகொள்ளலாமே தவிர வேறு காரணம் இல்லை. அப்படி இருந்தாலும் கோவை ஜில்லாவில் உள்ள நாயக்கர்மார்கள் 100க்கு 90 பேர்களும் ஒக்கிலிய கவுண்டர்கள் 100க்கு 99 பேர்களும் பட்டக்காரர் போன்ற தக்க செல்வாக்குள்ள பிரமுகர்களும், மற்றும் ஏழைக்குடியான சகோதரர்களும் 100க்கு 99 வியாபாரிகளும் தோழர் ஷண்முகத்தைத் தங்கள் பிரதிநிதியாகக் கொள்ளும் கௌரவத்தை அடை ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தைரியமாயும் வலிமையாயும் சொல்லுவோம்.

இவை ஒருபுரமிருந்தாலும் சேலம் கோயமுத்தூர் வட ஆற்காடு தொகுதியில் இந்திய சட்டசபைக்கு தோழர் ஷண்முகம் அவர்களிட ஆதரவைப்பெற்றவர்கள் தான் இப்போதும் வெற்றி பெறமுடியுமே தவிர அவரை வைது விஷமப் பிரசாரம் செய்துகொண்டிருக்கும் பார்ப்பனத் திரு கூட்டத்தின் ஆதரவு பெற்றவர்கள் வெற்றி பெருகின்றார்களா என்பதை சற்று பொருமையாய் இருந்து வேடிக்கை பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

நிற்க தேர்தல் பிரசார நாடகம் இங்கனமிருக்க "காங்கிரசில்சேராதவன்,பாவி,தேசத்துரோகி" என்றும் "காங்கிரசுகுதிரைக்குசமானம் மற்றககூஷி கழுதைக்குச்சமானம்" என்றும் பேசுவதும் எழுதுவதும் "காங்கிரசின் பேரால் ஒருகழுதை நின்றாலும் அதற்குத் தான் ஓட்டுச்செய்ய வேண்டுமே ஒழியமற்றபடி யார் எவ்வளவு பெரியயோக்கியனாகவும்,சாமர்த்திய சாலியாயும் இருந்தாலும் அவர்களுக்கு ஓட்டுச்செய்யக்கூடாது" என்றும் சொல்லுவதும், வெளிநாட்டிலிருந்து சுய அறிவும், முன் பின் யோசனையும் அற்ற ஆட்களைக் கூட்டிவந்து அவர்களை உசுப்படுத்தி "ஜஸ்டிஸ், கக்ஷியும்சுயமரியாதைக் கக்ஷியும் தேசத்துரோகக் கக்ஷி" சர்க்காருக்கு அடிமைக் கக்ஷி என்றெல்லாம் பேசும்படி செய்வதுமான இழிவான காரியங்களைப் பற்றி மறு முறை எழுதுவோம்.

## செட்டி நாட்டுச் சுற்றுப்பிரயாண வெற்றி.

தோழர் ஈ. வெ. ராமசாமி தனது தோழர்களுடன் ராமநாதபுரம் செட்டிமார் நாட்டில் சுமார் 10 நாள் வரை காரைக்குடி, தேவ கோட்டை, சிவகெங்கை, திருப்பத்தூர், கீழச் சிவற்பட்டி, சிங்கம்புணரி, கோட்டையூர் முதலிய 10, 12 இடங்களில் தினம், இரண்டுமூன்றுகூட்டங்கள் வீதம் கூட்டப்பட்டதில் அவற்றுள் பெரிதும் 400, 500 பெண்களும், 2000, 3000 ஆண்களுமாய் ஜாதி மதபேதம் இல்லாமல் வந்து கூடியதும் அக்கூட்டங்களில் ஜாதியையும், மதங்களையும், தேசியங்களையும், செல்வந்தர்களின் அட்டூளியங்களையும், ஆடம்பரச்செலவுகளையும் அவிவிவேகமான சடங்குகளையும், கண்டித்துப்பேசியும் வந்ததில் ஒவ்வொரு இடங்களிலும் மக்களின் ஆதரவும், உற்சாகத்தையும் முழு ஆதரவையும் காட்டக்கூடிய கரகோஷங்களும் அமோதிப்பு அறிகூறியும் தாண்டவமாடியதைக் கண்டோம். சிறப்பாக பல ஆச்சிமார் பெண்களின் ஆமோதிப்பும், மகிழ்ச்சியும் ஆச்சரியப்படத்தக்க மாதிரியில் காணநேர்ந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சமூக சீர்திருத்தத் துறையில் குழந்தைகள் மணம் தடுத்தல், விதவைகள் மணம் ஆதரித்தல், கலப்பு மணம் செய்து கொள்ளுதல், வைதீகச் சடங்குகளை வெறுத்தல் ஆகிய விஷயங்களில் பழுத்த கிழங்களும், வைதீகப் பிடுங்கல்களும் அடுக்களையையும் படுகை, அரையையும் தவிர மற்ற உலக வாசனையே அற்ற பாட்டி ஆச்சிமார்களும் கூட காட்டிய உற்சாகமும், ஆமோதிப்பும் ஆதரவும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. கடைசியாக இந்த சுற்றுப் பிரயாணத்தில் தோழர்கள் ரங்கம்மாள, சிதம்பரம், நீலாவதி, ராமசுப்பிரமணியம், விசாலாட்சி, சுப்பையா ஆகிய தம்பதிகளும் தோழர்கள் கோட்டையூர் நடேசன், சின்னையா, வள்ளியப்பா, லட்சுமணன், தேவகோட்டை வக்கீல் லட்சுமிரதன் பாரதி, வக்கீல் ஈப்பன், P. V. அருணசலம் சிவகங்கை வக்கீல் பொன்னுசாமி, திருக்கோஷ்டி நமச்சிவாயம், திருப்பத்தூர் பள்ளிகொண்டான், சிங்கம்புணரி பெரியய்யா, குருமூர்த்தி ஆகியவர்களும், ஷையார்களுடைய துணைவிமார் முதலிய பல தோழர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியும், பொருப்பும் போற்றத்தக்கதும் நன்றி செலுத்தத்தக்கதுமாகும்.

அடுத்தமாத ஆரம்பத்தில் திருநெல்வேலி ஜில்லா சுற்றுப்பிரயாணம் இது போலவே வெற்றிகாமாய் முடிவுபெறலாமென்று உறுதிசெய்யப்பட்டிருக்கிறோம்.

## திருச்சியில் ரங்கம்மாள் சிதம்பரம் மறுமணம்.

திருச்சியிலுள்ள தமிழ்நாடு புரோகித மறுப்புச் சங்கத்தின் ஆதரவில் 14-7-34ந் தேதி மாலை 5 மணிக்கு தேவதானம் கருணைநிதிப் பார்க்என்று இதுபோது பெயர் கொடுக்கப்பட்டுள்ள காலஞ்சென்ற நாராயணபிள்ளை சத்திரத்தின் காம்பவுண்டுக்குள் தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் கோட்டையூர் தோழர் ஏ. எல். சிதம்பரம் (செட்டியார்) அவர்களுக்கும் சென்னை, தோழர் டி. ரங்கம்மாள் (ரெட்டியார்) அவர்களுக்கும் சுயமரியாதை முறையில் விதவாவிவாகம் சிறப்பாக நடைபெற்றது.

மாலை4மணிக்கே ஏராளமாக ஆண்களும், பெண்களும் கூடி விட்டனர். மாலை 5மணிக்கு மணமக்கள் தங்கள் ஆசனத்தமர்ந்ததும், 2 நண்பர்கள் சமதர்மக்கீதம் பாடினர். பின்னர் புரோகித மறுப்புச் சங்கத்தின் சார்பாக தோழர் ராமசுப்பிரமணியம் மணமக்களையும் தலைவர்களையும், மணசம்பந்தமான விபரங்களையும் ஜனங்களுக்குக் கூறி தோழர் ஈ. வெ ராமசாமி அவர்களை தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டார். பின்னர் தலைவர் எழுந்து முகவுரையாகச் சில நிமிஷ நேரம்பேசி மணமக்களைத் தங்கள் தங்கள் வாழ்க்கை ஒப்பந்த உறுதி மொழிகளைக் கூறும்படி தெரிவித்தார். பின்னர் மணமகனும், மணமகளும் உறுதி மொழிகளைக் கூறினர்.

மணமக்களிருவரும் ஒரு வருக்கொருவர் மாலையணிவித்து மோதிரம் மாற்றிக்கொண்டார்கள்.

பின்னர் தோழர் ராமசுப்பிரமணியம் அவர்களால், திருமணத்திற்கு வரமுடியாது போனவர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்தி கடிதங்கள், தந்திகள் வாசிக்கப்பெற்றன. செட்டி நாட்டிலிருந்தும், இன்னும் பல இடங்களிலிருந்தும் பலர் வந்திருந்தார்கள். அவர்களில் முக்கியமாக தோழர் ஈ. வெ. ராமசாமி, S. முருகப்ப, மு. மரகதவல்லி, S. நீலாவதி, ராமசுப்பிரமணியம், கும்பகோணம் K K. நீலமேகம், ராமசுப்பையா, S V. லிங்கம் இன்னுமனேக தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

திருச்சி சுயமரியாதைச் சங்கத்தாராலும், பொன்மலை சுயமரியாதை சங்கத்தாராலும், ஸ்ரீரங்கம் சுயமரியாதை சங்கத்தாராலும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப் பெற்றன.

பின்னர் "குமரன்" ஆசிரியர் தோழர் எஸ். முருகப்பா, ஈரோடு டாக்டர் எம். கிருஷ்ணசாமி, தோழர் மரகதவல்லி, தோழர்கள் அ. பொன்னம்பலம், புதுக்கோட்டை வக்கீல் கே. முத்துசாமி வல்லத்தரசு, கும்பகோணம் கே. கே. நீலமேகம், ஈ. வெ. ராமசாமி, எஸ். நீலாவதி முதலியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

முடிவாக தோழர் ராமசுப்பிரமணியம் வந்தனோபசாரம் கூற இரவு 9-மணிக்கு நிகழ்ச்சி இனிது நிறைவேறியது.

## விருதுநகரில் சமதர்மப் பிரசாரம்

12—8—34—இரவு 7 மணிக்கு ஒரு பொதுக் கூட்டம் முனிஸிபல் கௌன்ஸிலர் தோழர் மகாலிங்கம் அவர்கள் தலைமையில் ஆரம்பித்து. தோழர் S. V. லிங்கம் "இந்தியா சட்டசபைத் தேர்தலும் தென்னாட்டுப்பார்ப்பனரும்" என்பதுபற்றியும், தோழர் ப. ஜீவானந்தம் "மனிதசமூகமும்முன்னேற்றமும்" என்பதுபற்றியும் சுமார் 11 மணிவரை பிரசங்கம் செய்தார்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது என் ஒரு நிருபர் எழுதுகிறார்.

## ஜனனம்

சுயமரியாதை இயக்கத் தோழர் A. பாபுசாமி அவர்களின் துணைவியார் தோழர் மகாலக்ஷுமி அர்களுக்கு 23—8—34ந் தேதி இரவு கோயமுத்தூரில் ஆண்குழந்தை பிறந்திருக்கிறது. தாயும், குழந்தையும்சௌக்கியமாக இருக்கிறார்கள்.

(ஒருநிருபர்)

(9ம் பக்கத் தொடர்ச்சி).

மென்றே - நாம் சொல்ல வரவில்லை. வியாபாரிக்கு உள்ள புரோக்கர்களும், வக்கீல்களுக்கு உள்ள டவுட்டுகள் (புரோக்கர்களும்) மற்றவர்களுக்கு உள்ள கூட்டி விடுகின்றவர்களும் எவ்வளவு உண்மையானவர்கள்-நாணயமுள்ளவர்கள் சுபாவமில்லாதவர்கள் என்று சொல்லக்கூடுமோ அதைவிட தேர்தல் புரோக்கர்கள் எவ்விதத்திலும் மோசமானவர்கள் அல்ல என்றே சொல்லுவோம். ஆனால் முன்னையதைவிட பின்னையதில் மக்கள் சுலபத்தில் ஏமாந்து விடக்கூடும் என்று மாத்திரம் சொல்லலாம். என்றாலும் சக்தி இல்லாதவர்கள் தோற்றுப்போவது எவ்வளவு ஞாயமோ அது போல் தான் அறிவில்லாதவர்கள் ஏமாந்து போவதும் நியாயமேயாகும். ஆதலால் அதையும் நாம் குற்றம் சொல்லுவதற்கு இல்லை.

மக்கள் ஏமாந்து போகின்றார்களே என்கின்ற பரிதாபம் யாருக்காவது இருக்குமானால் அப்படிப்பட்டவர்கள் மக்கள் ஏமாறுவதற்கு ஆதாரமாய் இருக்கும் காரியங்களை, முயற்சிகளை தைரியமாய் வெளியாக்க முயற்சிக்கலாம். இதைத்தவிர யாரையும் சொந்தத்தில் தனிப்பட்ட முறையில் குற்றம் சொல்லுவது நியாயமல்ல என்பதே நமது அபிப்பிராயம்.

அந்த முறையில் தான் தேர்தல் தந்திரங்களைப் பற்றி சில எழுத ஆசைப்படுகின்றோம்.

தேர்தல் முறை இந்நாட்டில் ஏற்படுவதற்குமுன் பட்டம் பதவி உத்தியோகம் முதலியவற்றில் ஆசை உள்ளவர்களுக்கு மக்களைப் பற்றிக் கவலை இல்லாமல் அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளுவதை மாத்திரமே அனுசரிக்க வேண்டிய—போதுமான யோக்கியதாம்சமாய் இருந்து வந்தது. அதற்கு சௌகரியமில்லாதவர்கள் மக்களுக்கு நல்ல பிள்ளையாக நடந்து காட்டி மக்களிடம் அரசாங்க நிர்வாக முறையில் உள்ள தவறுதல்கள் பலவற்றைத் திரித்தும் பெருக்கியும் தங்கள் இஷ்டத்துக்கு அனுகுணமாய் கற்பித்தும் காட்டி மக்களை ஏமாற்றி அவர்களது நம்பிக்கையைப் பெற்று ஜனப்பிரதிநிதித்துவத்திற்தும் பட்டம் பதவி அதிகாரம் உத்தியோகம், பெருமை முதலியவற்றில் ஒரு பங்கு கிடைக்கும்படி செய்து கொள்ளவேண்டியிருந்தது. இதனால் பிந்தியகூட்டத்தாருக்கு எப்படியாவது மக்களை ஏமாற்றுவதற்கு சாதனம் கண்டு பிடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது என்பதில் அதிசயமில்லை.

நம் நாட்டு நிலைமையானது ஒட்டு மொத்த மக்களில் 100க்கு 7-அல்லது 8பேரே படித்தவர்கள் என்று சொல்லக்கூடியவர்களாய் இருப்பதாலும் அதிலும் 100-க்கு ஒருவர் இருவரே நன்றாய்ப்படிக்கவும், எழுதவும், யோசிக்கவும் உண்மையைக் கண்டு பிடிக்க சௌகரியமும் உள்ளவர்களாய் இருப்பதாலும் இம்மக்களை ஏமாற்ற அதிக கஷ்டமான மார்க்கம் ஏதுமே தேடவேண்டிய அவசியமில்லாமலும் போய் விட்டது. இதானது இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு பெரிய அனுகூலமாய் ஏற்பட்டு விட்டது.

இந்தக் காரணத்தால் தேர்தல்களில் பிரவேசிக்கின்றவர்கள் தங்கள் சொல்லும் எழுத்தும், கொள்கைகளும் உண்மையும் நாணயமும், யோக்கியப் பொறுப்பும் நன்மையும் சிறிது கலந்ததாகவாவது இருக்கின்றதா என்கின்ற கவலையும், பயமும் இல்லாமல் என்ன வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பேசவும் எழுதவும் நடக்கவும் ஆன காரியங்கள் செய்ய துணிவுள்ளவர்களாகி விட்டார்கள்.

இதோடு மாத்திரமல்லாமல் இந்நாட்டின் பொருளாதாரத் திட்டமும், வாழ்க்கைத் திட்டமும் மக்களுக்கு எவ்வித பொறுப்பும் ஜவாப்தாரித்தனமும் ஒழுக்கமும், அற்றதாகி எப்படியாவது வயிறு வளர்க்க வேண்டியதே மனித ஜீவனின் கடமை என்று இருந்து வருகின்றபடியால் மேற்கூறப்பட்ட கூட்டத்தாருக்குவெகு எளிதில் கூலிகள் கிடைத்து விடுகிறார்கள். அவர்கள் மூலமும் மக்களை ஏமாற்றக்கருதி தங்கள் தங்களுக்கு அனுகூலமாக எப்படி வேண்டுமானாலும் உண்மைகளைத் திருத்தியும், அபாண்டங்களைக் கற்பித்தும் அகாரணமாய் வைவும் பேசவும், எழுதவும் கூடிய கூலிகளை நியமிக்க வேண்டியவர்களாவதுடன் இப்படிப்பட்ட பலர்கூலிக்கு அமரவேண்டியவர்களாகவும் ஆகிறார்கள்.

இந்த இருகூட்டத்தாரும் மக்களின் அறியாமையும், பாமரத் தன்மையையும் நன்றாய் அறிந்து கொண்டதால் தாங்கள் பேசுவதும், எழுதுவதும் 100க்கு 100 பொய்யாகவும், அயோக்கியத் தனமாகவும், ஏமாற்றலாகவும் இருக்கின்றது என்பதை உணர்ந்தும் இப்பவோ பின்னையோ இன்னும் அரை விநாடியிலோ உண்மைவெளியாகி விடக்கூடியதாய் இருந்தாலும் இதற்கு முன் தாங்கள் பேசியதும், எழுதியதும் அடியோடு பொய்த்துப் போய் பல தரம் மக்களை ஏமாற்றி இருக்கின்றோமே என்பதை உணர்ந்திருந்தாலும் சிறிதும் பயமில்லாமல் தங்கள் காரியங்களை நடத்திச் செல்லுகின்றார்கள்.

இவைகள் எல்லாம் இப்போதைய வாழ்க்கைத் திட்டத்தின்படி குற்றம் என்று சொல்ல நம்மால் முடியவில்லை. ஏனெனில் இந்தப்படி எல்லாம் நடந்தால்தான் இன்று மனிதன் மகாத்மாவாகலாம், பிரபலஸ்தராகலாம், கீர்த்தியும் புகழும் பெறலாம், பட்டம் பதவியும் அடையலாம், அதிகாரம் செய்யலாம், பணம் சம்பாதிக்கலாம், பாடுபடாமல் சோம்பேறியாய் இருந்து ஊரார் உழைப்பில் வயிறு கழுவலாம் மற்றும் அவற்றிற்கேற்ற தேசாபிமானி, தேசிய வீரர், தேசியப் பத்திராதிபர் ஆகியவர்கள் ஆகலாம் என்கின்ற நிலையில் வாழ்க்கைத் திட்டம் இருந்து வருகின்றது, இது இன்று நேற்று அல்லாமல் வெகு காலமாகவே இருந்தும் வந்திருக்கின்றது.

ஆதலால் இப்படிப்பட்ட செய்கைகளைக் கண்டு யாவரும் வருந்தக்கூடாது என்றும் யாவரையும் குற்றம் கூறக்கூடாது என்றும் சொல்வதோடு முன் சொல்லியபடி அவைகளை யெல்லாம், அப் புரட்டுகளை யெல்லாம் தைரியமாய் வெளிப்படுத்தவேண்டியது ஒவ்வொரு யோக்கியமானவனுடையவும், பட்டம் அதிகாரம் பெருமை புகழ் ஆகியவற்றில் ஆசையில்லாத பொதுநல ஊழியத்திற்கு உயிர் வாழ்பவர்களுடையவும் கடமை என்று சொல்லிவிட்டு அடுத்த அத்தியாயத்தில் பிரவேசிப்பாம்.

(தொடரலாம்)

## சென்னைக்கு ஏஜண்ட் தேவை

சென்னையில் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஒரு ஏஜண்ட் தேவை. மற்ற விபரங்கள் தெரிந்துகொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்
'பகுத்தறிவு'
ஈரோடு.

## மதிப்புரைகள்.

### "வெற்றி முரசு"

மாயவரம் தோழர் C. நடராஜன் அவர்களை வெளியிடுவோராகவும், பொறுப்பாளராகவும், மாயவரம் வக்கீல் தோழர் K. லக்ஷிமிகாந்தம் B. A., B. L., அவர்களை கௌரவ ஆசிரியராகவும் கொண்டு மாயவரத்திலிருந்து வெளியாகும் "வெற்றி முரசு" என்னும் வாரப்பத்திரிகை நமக்கு அனுப்பப்பட்டதைக்கண்டு மகிழ்ந்தோம். இது பகுத்தறிவுக்கு உற்றதோழனாகவும், சுயமரியாதை சமதர்மக் கொள்கைகளுக்கு வழிகாட்டியாகவும் திகழ்வதுடன் தஞ்சை ஜில்லாவுக்கு என்று தக்கதொரு பத்திரிகை இல்லாததால் அதை முன்னிட்டும் வெற்றி முரசை நாம் முழுமனதோடு வரவேற்கின்றதுடன், தமிழ் மக்களையும், சிறப்பாகத் தஞ்சை ஜில்லாவாசிகளையும் ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம். நல்ல கிளேஸ் காகிதத்தில் சுத்தமான பதிப்புடனும் மேல் அட்டையுடனும் 16 பக்கம் கொண்டது இதன்

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி 0—1—0

விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு",
மாயவரம்.

### "சமதர்மம்."

ஜோலார்பேட்டை தோழர் V. பார்த்தசாரதி அவர்களை பதிப்பாளராகவும், பொறுப்பாளராகவும், ஆசிரியராகவும் கொண்டு ஜோலார்பேட்டையிலிருந்து வெளிவரும் "சமதர்மம்" என்னும் வாரப்பத்திரிகை நமது பார்வைக்கு வந்தது. இது நமது சமதர்மக் கொள்கையையும், பகுத்தறிவு தத்துவத்தையும் வடஆர்காடுஜில்லா விஷயங்களையும் தாங்கி சுயமரியாதை இயக்கத்துக்கு உற்ற தோழனாக விளங்குவதாகும். வட ஆர்காடு ஜில்லாவுக்கு ஒரு தக்க பத்திரிகை இல்லாத சமயம் தோழர் பார்த்தசாரதி அவர்கள் சமதர்மம் என்னும் பேரால் ஒரு வாரப்பத்திரிகை ஆரம்பித்தானது மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்கது என்பதில் யாருக்கும் அபிப்பி

ராய பேதமிருக்காது. இதை தமிழ் மக்களும், சிறப்பாக வட ஆற்காடு ஜில்லா வாசிகளும் ஆதரிக்க ஆசைப்படுகின்றோம்.

12 பக்கம் ருயல் கிரேஸ் அட்டையுடன் வெளியாவது.

வருட சந்தா ரூ. 2—8—0
தனிப்பிரதி 0—0—6

விலாசம்:—
மானேஜர் "சமதர்மம்"
ஜோலார்பேட்டை,
வடஆற்காடு.

---

## பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(முதற்பாகம்)

இந்நூல், கத்தோலிக் குருவாக இருந்தவரும், 50 ஆண்டுகளாக கிறிஸ்து மதப்போதகராக இருந்து போதிய அனுபவம் பெற்றவரும், ஆங்கிலத்தில் எழுதும் திறமை மிக்குடையவருமான அறிஞர் செனிச்யூ அவர்களால் ஆங்கிலத்தில் The Priest The Women and Confessionel என்று எழுதப்பட்ட ஓர் அறிய நூலின் மொழிபெயர்ப்பேயாகும்.

இந்நூலில் பாவ சங்கீர்த்தனத்தின் பேரால் கத்தோலிக் மதத்தில் நடைபெற்றுவந்த சில ஆபாசங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டுகிறார். சில பாதிரிமார்களின் கூடா ஒழுக்கங்களை நன்கு விளக்கி அவர்களைத் திருத்த முயற்சித்திருக்கிறார். பெண் மக்கள் பாவ சங்கீர்த்தனம் என்னும் பைத்தியக்காரத்தனத்தால் தாங்கள் செய்ததும்-மனதில் நினைத்ததுமான எல்லா இரகசியங்களையும் பாதிரிகளிடத்தில் கூறிவிடுவதால் பாதிரிகள் என்ன அக்கிரமங்கள் புரிந்தாலும், கற்பை அழிக்க முயன்றாலும்—அழித்தாலும், தங்கள் தலை மயிர் பாதிரிகளின் காலுக்குள்ளிருப்பதாக நினைத்துக் கொண்டு பாதிரிமார்கள் செய்த அக்கிரமங்களை வெளியிட்டால் எங்கு தனது இரகசியங்களை வெளியிட்டு விடுவார்களோ என்றஞ்சி பாதிரிகள் செய்யும் அக்கிரமங்களையெல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டியிருப்பதோடு தங்கள், புருஷன், தகப்பன் முதலியவர்கள் பாதிரிகளுக்கு விரோதமாய் எதுவும் நடவடிக்கைகள் எடுக்க விடாதும் தடுத்து விடுகின்றனர் என்பதையும் இந்நூலில் தம் அனுபவ வாயிலாய்க் கண்ட பல சரித்திரங்களை கூறி விளக்கி இருக்கிறார்.

பாவ சங்கீர்த்தனத்தால் கெட்டழிந்த குடும்பங்களெத்தனை, பெற்றோர்களைத் துறந்த பிள்ளைகளெத்தனை, காதலர்களைக் கைவிட்டுக் கதறும் காதலிகள் எத்தனை, மனைவியைப் பறி கொடுத்த புருடர்கள் எத்தனை என்பவைகளை இந்நூலாசிரியர் தமது மதத்திலுள்ள பெரிய குருமார்களுக்கு எடுத்துக்காட்டி தம் மதத்தினின்று இப்பாவ சங்கீர்த்தனம் என்னும் பயங்கரச் செயலை ஒழிக்க முயன்று பயன்படாததை இந்நூலில் நன்கு காணலாம்.

[வெளியிட்டவர்; பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம், ஈரோடு. விலை அணு 3.]

---

# சீர்திருத்த மகாநாடு

## திருச்சி.

10-8-33 காலை 9-மணிக்குஎற்கனவே பத்திரிக்கைகளில்விளம்பரம் செய்யப்பட்டிருந்த தமிழ் மாகாண முதலாவது சமூக சீர்திருத்த மகாநாடு திருச்சி முனிசிபல், பப்ளிக் ஹாலில் சென்னைத் தோழர் டாக்டர் பி. வரதராஜலு அவர்களின் தலைமையில் ஆரம்பமாயிற்று. தமிழ் நாட்டின் எல்லா ஜில்லாக்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிட்டபடி தோழர், திரு. வி. கலியாண சுந்தரம், அவர்கள் மகாநாட்டுத் திறப்புவிழாவை நடத்தித் தர அவரது உடல் நலிவு காரணமாக விஜயம் செய்ய இயலாது போயிற்று. தோழர் ஈ. வெ. ராமசாமி, தோழர் டாக்டர் பி. வரதராஜலு ஆகியவர்களுமே மகாநாட்டிற்கு உற்சாகம் அளிக்கவேண்டியவர்களாய் இருந்தார்கள்.

திருச்சி, தேவதானம் கருணாநிதி பார்க்கிலிருந்து சரியாய் 8-15 மணிக்கு பாண்டு வாத்திய கோஷங்களுடன் ஸ்ரீரங்கம், சமயபுரம் யானைகள் முன் செல்லவும், ஏராளமான ஜனங்களிடையே டாக்டர் நாயுடு அவர்கள் மோட்டார் காரில் வரவேற்பு கழகத் தலைவர் தோழர் என். சங்கரன், கும்பகோணம் தோழர் சக்ரவர்த்தி அய்யங்கார் முதலியோருடனும் மகாநாட்டுக் கொட்டகைக்கு, ஆண்டார்த் தெருவு, சின்னக்கடைத்தெருவு, மேலப்புலிவார்டு ரோடு மார்க்கமாய் அழைத்துச் செல்லப்பட்டனர். கடைத் தெருவில் ஊர்வலத்தை நிறுத்தி டாக்டர் நாயுடு அவர்களுக்கு மலர் மாலைகள்சூட்டினார்கள். வழி நெடுக பல வரவேற்பு வளைகள் பல அமைக்கப்பட்டிருந்தன. வீதிகளில் புழுதி ஏற்படாதபடி நகர சபையார் தண்ணீர் தெளித்து வசதி செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. மகாநாட்டு கொட்டகையில் தமிழ் மாகாணத்திலுள்ள எல்லா ஊர்களிலிருந்தும் பல பிரபலஸ்தர்களும் பிரதிநிதிகளும் நிறைந்திருந்தார்கள்.

அவர்களில் முக்கியமாக தோழர் பொன்னம்பலம், புதுக்கோட்டை கே. எம். வல்லத்தரசு, மாயவரம் சி. நடராஜன், நாகை காளியப்பன், எஸ். வி. லிங்கம், நாகை பாலு, கும்பகோணம் சக்ரவர்த்தி, வலங்கி மான் அப்துல் சத்தார், கும்பகோணம் சோலை முத்து நாடார், சேலம் டைம்ஸ் ஆசிரியர் ரெங்கசாமி, திருத்துரைப்பூண்டி தருமலிங்கம், பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி, டேவில்ஸ், பி- ஏ. முதலியோரும் மற்றும் சென்னை தஞ்சை, நாகை, விருதுநகர், மதுரை முதலிய விடங்களிலிருந்தும் பல பிரபலஸ்தர்கள் விஜயமாகியிருந்தார்கள்.

மகாநாட்டிற்கு வரமுடியாத வெளியூர் பிரதிநிதிகள் தந்திகளும், கடிதச்செய்திகளும் அனுப்பி யிருந்தனர். அவர்களில் முக்கியமாக, சென்னை, சட்ட மந்திரி சர். கே. வி. ரெட்டி நாயுடுகாரு, தூத்துக்குடி துறைமுக டிரஸ்யும், முனிசிபல் கவுன்சிலருமான தோழர் கே. கே. எ. பெரியசாமி சென்னைத் தோழர் சி- டி. நாயகம் காரைக்குடி தோழர் மரகதவல்லி, முருகப்பா, திருப்பூர் தோழர் அய்யா முத்து, கரூர் சுயமரியாதைச் சங்கக் காரியதரிசி, தோழர் எஸ். பி. கே. தேவர், திரிச்சி, டாக்டர் டி. எஸ்- எஸ். ராஜன், திருச்சி, டாக்டர் சுவாமிநாத சாஸ்திரி, நாகை, இந்திய யுவர் சங்கத் தலைவர் டி என். ராமசாமி முதலியவர்களாவார்கள்.

வரவேற்புத்தலைவர் சொற்பொழிவு நடந்தது. பின்தலைவர் டாக்டர் நாயுடு அவர்க்ள் தலைமை வகித்து முன்னுரைப் பிரசங்கமாக தற்கால், இந்திய சமூக நிலைகளைப்பற்றியும், அந்நிலைக்குக் காரணமான, கடவுள், மதம், பேரன்பு இவைகள் எப்படி பார்ப்பன சமூகத்தாரால், உணர்ச்சியுண்டாக்கப்பட்டு வருகிறதென்றும், பெண்ணடிமை நீங்க என்ன என்ன, செய்ய வேண்டும் என்பதையும், சுமார் 1 மணி நேரம் விளக்கிப்பேசினார்.

சரியாக 12 மணிக்கு இடைவேளை சாப்பாட்டிற்காக மகாநாடு கலைப்பெற்று மீண்டும் 3-30 மணிக்கு ஆரம்பமானது.

பிற்பகல் நடவடிக்கைகளில் முதலாகதோழர் ஈ.வெ.ராமசாமிஅவர்கள் டாக்டர் நாயர் உருவப்படத் திறப்பு விழாவை நடத்தினர். அதன்போது சமய சமூகத்துறைகளில் நாம்இன்று புரட்சி மயமான ஒரு மாறுதலுக்குள்ளாகி கொஞ்சமாவது தெளிவு நிலைமையை அடைந்திருப்பது டாக்டர் நாயர் அவர்களாலேயே ஆகும் என்றும், தாம் நாயருடன் 1915ல் ஈரோட்டில் நடந்த அரசியல் மகாநாட்டில் ஒத்துழைத்திருப்பதாகவும், நாயரின் குணங்கள் எல்லா வகையிலும் புரட்சித்தன்மை பொருந்தியது என்றும் பேசினார்.

அதற்குப்பின் டாக்டர் வரதஜாலு தோழர் ஈ. வெ. ராமசாமி ஆகிய மூவருக்கும் திருச்சி ஜில்லா பகுத்தறிவுச் சங்கத்தாரால் வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. டாக்டர் நாயுடுகாரவர்கள் பொதுக் கூட்டத்திற்கு போகவேண்டியிருந்ததால் பின் நடவடிக்கைகள் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடந்தது.

இடையில் பல தீர்மானங்கள் தோழர்களான ராம. சுப்ரமணியம், அ. பொன்னம்பலம், வல்லத்தரசு, ராவணதாஸ், அழகிரிசாமி முதலியவர்களால் பிரரேபிக்கப்பட்டும் ஆமோதிக்கப்பட்டும் இனிது நிறைவேறியது.

அதன் பிறகு தோழர் அழகிரிசாமி அவர்கள், பேசினார். மணி 7 ஆகியும் கொட்டகையின் கூட்ட நிலைமை அமைதியை குடிகொண்டதாகவும், மேலும் மேலும் ஜனக்கூட்டம் பெருகு வதாகவும் இருந்தது. தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமைஸ்தானத்தில் முடிவுரையாக சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம்பேசினார் அவ்வளவு நேரம் பேசியும் ஜனங்கள் 4 மணி முதல் 8 மணி வரை கேட்டிருந்தும் இன்னும் கேழ்க்க அவாவுடையவர் களாக இருந்தார்கள்.

மாலை டவுன் ஹால் மைதானத்தில் கூட்டப்படும் கூட்டத்திற்கு தோழர் ஈ. வே. ராமசாமி அவர்களும் போகவேண்டியிருந்ததால் இரவு 8 மணி சுமாருக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

பொதுக்கூட்டத்தில் சுமார் 2,. 3 ஆயிரம் பேர்கள் இரவு 10 மணிவரை கேட்டுக்கொண்டிருந்தார்கள். ரயிலுக்குப் போகவேண்டிய அவசரத்தில் 10 மணிக்கு முடிவு பெற்றது.

டாக்டர் நாயடு அவர்கள் மறுநாள் பொன்மலை தொழிலாளர் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கக் கேட்டு கொண்டதில் நின்று விட்டார். ஈ. வெ. ரா அன்று இரவே பயணமாகி விட்டார். தீர்மானங்கள் பின்னால் வெளிவரும்.

# Decameron of Boccaccio.

# "டெக்கமாரன்"

## அல்லது

# விகடக்கதைகள்.

(மொழிபெயர்ப்பாளர் தோழர் உடுமலை கனகராஜன்)

இந்நூல் பொக்காஷியோ என்பவரால் 14ம் நூற்றாண்டில் எழுதப் பெற்றது. இதில் அக்காலத்திய மதபோதகர்களுடைய சுயநலமும், மோசக்கருத்தும் நிறைந்த நடத்தையைப் பற்றிய சில கதைகள் காணப்படுகின்றன. இவைகளை நமது மக்களுக்கு பகுத்தறிவையும் வேடிக்கையையும் பொழுது போக்கையும் உண்டாக்க வேண்டும் என்கின்ற ஆசையின் பேரில் மொழி பெயர்க்கலானேன். இந்நூலிற்கு Alfred Wallis F. R. S. L. ஆல்பிரட் வாலிஸ் எப். ஆர். எஸ். எல். என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய முகவுரையின் சாராம்சத்தைக்கீழே தருகிறேன். இது ஓர் மதிப்புக்குறிய பழமையான நூல். இதில் நகைச்சுவை பொருந்திய தெள்ளிய நடையில் கதைகள் ரூபமாக அக்காலத்திய சமூக வாழ்க்கை விளக்கப் பட்டிருக்கிறது. இந்நூலாசிரியரான பொக்காஷியோ கி. பி. 1313ம் வருஷம் பிறந்தவர். இவர் பிறப்பிடம் பாரிஸோ, பிளாரன்சோ என்பது சரியாகத் தெரியவில்லை. இவர் சிலகாலம் தம் பிதாவின் வற்புறுத்துதலின் பேரில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்து பிறகு தமது கவனத்தைக் கல்வித்துறையிலேயே செலுத்தலானார். இவர் அக்காலத்தில் பொதுஜன மதிப்பைப்பெற்று பல பொறுப்பு வாய்ந்த உத்தியோகங்களை வகித்தார்.

ஒரு நாள் ஓர் கிறிஸ்துவச் சந்நியாசி இவரை பொக்காஷியோவையணுகி இவரது இறப்பு நெருங்கிவிட்டதாகவும், அதனால் மதத்திற்குப் புறம்பான படிப்பை விட்டு, தமது வாழ்க்கையைத் திருத்தியமைத்து மோக்ஷ சாதனங்களைத் தேடும்படியாகவும் சாகுந்தருவாயிலிருந்த ஓர் பாதிரி பொக்கோஷியாவிடம் இதைத்தெரிவித்து கேட்டுக் கொள்ளும் படி சொன்னதாகவும் சொன்னார். மேலும் அக்கிருஸ்தவ சன்யாசிதான் ஒரு தெய்வீகத்தன்மை பொருந்தியவரென்பதை மெய்ப்பிக்க பொககாஷியாவுக்கும் அவரது நண்பர் பெட்ரூர்க் Petrarch என்பவருக்கு மட்டும் தெரிந்திருந்த சில ரகசியங்களைச் சொல்லிக்காட்டினார்.

இவ்விஷயத்தைப் பற்றி பொக்காஷியோ தமது நண்பரான பெட்ரூர்க்குக்கு ஓர் கடிதம் எழுதினார். இதற்குப்பெட்ரூர்க் பதில் எழுதுகையில் ஒரு மனிதனுடைய வயது, தோற்றம், பழக்க வழக்கங்கள், நடவடிக்கை, கொள்கை, பேச்சு, தொனி, சம்பாஷணை, உணர்ச்சி, அபிப்பிராயம், சிநேகிதர்கள் அவர்களுடைய தன்மை முதலியவற்றிலிருந்து சில காரியங்களை ஒருவாறு சரியாகவே யூகித்துச் சொன்னாலும் சொல்லலாம். அது தெய்வீகத் தன்மை பொருந்தியதாகவும் தோற்றக்கூடும். ஆனால் அவற்றில் தெய்வீகத்தன்மை என்பது சிறிதும் இல்லை என்று குறிப்பிட்டு, மத்திய வயதிற்கு மேற்பட்டு தேகாரோக்கியம் குன்றிய ஒரு மனிதனுக்கு இறப்பு சமீபித்துக் கொண்டு வருகிறது என்பதை தெய்வீகத்தன்மையை உபயோகப்படுத்தி மறு உலகத்திலிருந்து தெரிந்து சொல்ல வேண்டியதில்லை என்றும் சொன்னதோடு தமது அறிவை சர்வ சுதந்திரத்தோடு யாதொரு கட்டுத்திட்டங்களுக்கும் உட்படுத்தாது உபயோகித்து நாஸ்திக நூல்களுட்பட எல்லா நூல்களையும் ஆராய்ச்சி செய்யும்படியும் கேட்டுக் கொண்டார். தமது நண்பரின் கடிதத்தைப்பார்த்த பொக்காஷியோ இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து துறவியாக எண்ணியிருந்ததை விட்டு விட்டு ஓர் ஆரம்பப் பாதிரியாகி மத நூல்களை ஊக்கத்துடன் ஆராய ஆரம்பித்தார்.

இவர் காலத்தில் ஐரோப்பா கண்டமானது அடிமைத் தனத்திலும், அறியாமையிலும் மூழ்கியிருந்தது. பல நூற்றாண்டுகளாக கல்விக்குரிய சாதனங்களெல்லாம் மதவாதிகளின் ஆதிக்கத்திற்கே உட்பட்டிருந்த படியால் அவர்கள் தங்களுடைய லாபத்தைக்கருதி, பழைய குருட்டு நம்பிக்கைகளையும், பல தப்பபிப்பிராயங்களையும் வளர்ப்பதிலேயே அதை உபயோகப்படுத்தி வந்தனர். அக்காலத்தில் ஐரோப்பா முழுவதிலும் தமது சொந்த அறிவை உபயோகப்படுத்தக் கூடியவர்கள் இருவர் மூவரே யிருந்தனர். அவர்களும் தங்களுடைய அபிப்பிராயங்களை மறை பொருளாகவே சொல்லி வர வேண்டியிருந்தது. படிக்கத்தெரிந்திருந்த ஒரு சிலரும் மகான்களுடைய அற்புதச் செய்கைகளையும் பாதிரிகளுடைய தெய்வீகத் தன்மையையும் பற்றிய பொய்க்கதைகளையே படித்து வந்தனர். ஆகவே அதிகமாய்ப் படிக்கப் படிக்க அறியாமையும் பெருகிவந்தது. இப்படிப்பட்ட நிலையில் தலைப்பில்குறிப்பிட்ட (Decameron of Boccaceio) டெக்கமரான் என்ற இந்நூல் மதஸ்தாபகர்களுக்கு ஓர் பேரிடியாயிருந்தது. ஆகையால் பாதிரிமார்கள் 1497ல் பிளாரன்ஸ் நகரில் கடைத் தெருவில் இந்நூலைத் தீயிலிட்டுக் கொழுத்தினர். 1619ல் இங்கிலாந்தில் ஆர்ச் பிஷப் ஆப் காண்டர்பரி இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதக்கூடாதென்று தடுத்து விட்டார்.

பாதிரிகள் இந்நூலை வெறுத்த போதிலும் Shakespeare, Tennyson, Longfellow, Heats ஷேக்ஸ்பியர், டென்னிஸன், லாங்பெலோ, ஹீட்ஸ் முதலிய பேரறிஞர்களும் மகாகவிகளும் இந்நூலைப் போற்றியிருப்பதுடன், இதைத்தழுவியே தாங்களியற்றிய பல நூல்களிலும் எழுதியிருக்கின்றனர்.

இந்நூல் ஆங்கில பாஷாபிவிருத்திக்கு அநுகூலமாக இருப்பதால் தற்போது B A., வகுப்பு மாணவர்கள் படிக்க வேண்டிய இதர புத்தகங்களில் ஒன்றாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

இக்கதைகள் நூலாசிரியர் தாம் நேரில் கண்ட உண்மைகளிலிருந்தும் பல கிரேக்க ஆசிரியர்களின் அநுபவங்களிலிருந்தும் எழுதப்பெற்றவை. (தொடரும்)

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, ராம. அழ. சிதம்பரம்—ரெங்கம்மாள் தம்பதிகட்கும் வரவேற்பு உபசாரப் பத்திரம் தோழர் நா. பள்ளிகொண்டான் அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப்பிறகு தோழர்கள்:— அ. பொன்னம்பலம், ப. ஜ்வானந்தன், எஸ். நீலாவதி, ராம. அழ. சிதம்பரம், ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் "மக்கள் முன்னேற்றம்" சுயமரியாதை இயக்கம் "பெண்கள் நிலைமை" சடங்குகள் மதச்செலவுகள் குருமார்கள் என்பது பற்றிப்பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் தோழர் எஸ். வி. லிங்கம் நன்றி கூற கூட்டம் இனிது முடிவடைந்தது. தோழர் கரு. பெரி. பெரியையா அவர்களுடைய இல்லத்தில் மாலை சிற்றுண்டி இரவு சாப்பாடு காலை சிற்றுண்டி யாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

### கீழச்சிவற்பட்டி பொதுக்கூட்டம்.

இவ்வூர் சிவன் கோவில் பக்கமுள்ள திடலில் அரசமரத்தடியில் 16-8-34ந்தேதி மாலை 6 மணிக்கு தோழர் ப. ஜீவானந்தன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள்:— அ. பொன்னம்பலம், எஸ். நீலாவதி, ராம. சுப்பிரமணியம், ராம. அழ. சிதம்பரம், ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் சமூக முன்னேற்றம், விதவைகள் துயரம், கலப்பு மணம், வீண் சடங்குகள், உற்சவம் மத செலவுகள், கும்பாபிஷேகம், கோவில் திருப்பணி என்பது குறித்துப் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் 9-30 மணிக்கு முடிவடைந்தது யாவரும் சாப்பாட்டிற்குப் பிறகு கோட்டையூர் பயணமானார்கள்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி ப. ஜீவானந்தம் இருவரும் 17-8-34ந் தேதி இரவு 8 மணிக்கு கோட்டையூரிலிருந்து ஈரோட்டிற்குப் பயணமானார்கள்.

18-8-34ல் நடைபெற வேண்டிய புதுக்கோட்டை நிகழ்ச்சியை தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் அவசர வேலையை உத்தேசித்து தேதி மாற்றப்பட்டிருக்கின்றது.

---


## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

—0—

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளி வருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேட்ரோட், நாகர்கோவில்.

---

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத்
தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழன், வெட்டு ஒன்று துண்டுஇரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளிநாடு ரூ. 5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
அண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த அபிப்பிராயம் வருமாறு;— "பொது ஜனங்களுக்குக்கல்வி கற்றுக்கொடுப்பதால் நன்மைகளைப் பார்க்கிலும் தீமைகளே அதிகமாக ஏற்படுமென்பது நிச்சயம்." இது காரணமாகவே சமீப காலம் வரை ருஷ்யா கல்வித்துறையில் மிகவும் பிற்போக்குள்ளதாக இருந்தது. 1904-ம் வருடத்தில் ருஷ்யாவில் 100-க்கு 3-வீதமும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 100-க்கு 23 வீதமும், ஜெர்மனியில் 100-க்கு 19-வீதமும் இங்கிலாந்திலும் பிரான்சிலும் முறையே 100க்கு 16வீதமும் கல்லூரிகளுக்குச் செல்பவர்களிருந்தனர். அக்காலத்தில் மதவிஷயங்களைப் போதனை செய்வதற்கென ருஷ்யாவில் சிற்சில கல்லூரிகளே இருந்தன. ஸார்மன்னர்களின் ஏகாதிபத்திய கவர்ன்மெண்டார் மதக்கல்லூரிகளில் எக்காரணம் கொண்டும் பிற விஷயங்களைப் போதனை செய்யக்கூடாதென்றும் கடுமையான உத்திரவுகளைப் போக்கியிருந்தனர்.

## திடீரென மாற்றம்.

அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டால், கல்வி விஷயத்திலும் மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. ஐக்கிய அமெரிக்க சர்க்கார் இங்கிலாந்திடமிருந்து பிரிந்துகொண்ட பின்னர் புதிய முறையில் கல்வி போதனைத் திட்டத்தைத்தயாரித்தனர். முடியரசு தொலைந்து குடியரசு ஏற்பட்டதும் ஜெர்மனியில் கல்வி போதனை விஷயத்தில் பற்பல மாறுதல்கள் கொண்டு வரப்பட்டன. சமீபத்தில் ஜெர்மனியில் ஏற்பட்டுள்ள புதியஹிட்லர் சர்க்காரும் கூட கல்வி விஷயத்தில் அநேக சீர்திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கின்றனர். இதுபோன்று இத்தாலியின் பாஸிஸ்ட்சர்க்கார் சிஞ்ஞோர் முசோலினியின் தலைமையில் கூட கல்வி முறையில் விசேஷ மாறுதல்களைக் கொண்டுவந்திருக்கின்றனர். 1917ம் வருடத்திலிருந்து சோவியத் ருஷ்யாவில் குடியரசு சர்க்கார் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு மிகவும் புத்திசாலித்தனமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டனர். அவர்கள் காலதாமத மன்னியில் ருஷ்ய மக்களுக்குக் கல்வி புகட்ட தீர்மானித்துக் கொண்டனர். இத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அவர்கள் மிகவும் தீவிரமாக உழைத்தனர்.

## ருஷ்யத் தலைவர்களின் தொண்டு.

ருஷ்யத் தலைவர்கள் தங்களுடைய நாட்டில் குடியரசு கவர்ன்மெண்டை ஏற்படுத்திய சமயத்தில் சுமார் 15 கோடி ருஷ்யர்கள் கல்வி, அறியாமை, தரித்திரம் முதலியவை காரணமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தனர். அவர்களை அறியாமை எனப்படும் "சாபக்" கேட்டிலிருந்து விடுவிக்க வேண்டிய மகத்தான பொறுப்பும் ருஷ்யத் தலைவர்களுக்கு ஏற்பட்டது. ருஷ்யத் தலைவர்கள் சிறிதும் அதைரியமடையவில்லை. படிப்படியாகக் கல்வி புகட்டி 15கோடி ஜனங்களையும் அறியாமையினின்று விடுவிப்பதற்கு ஒரு நூற்றாண்டிற்கு அதிகமாகுமென்பதை ருஷ்யத் தலைவர்கள் நன்கு அறிந்திருந்தனர் ஆகவே அவர்கள் மற்ற விஷயங்களைப் பிறகு கவனித்துக் கொள்ளலாமென்று தீர்மானித்து, முதலில் கல்வி விஷயத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினர். சில வருஷங்களுக்குள் 15 கோடி ஜனங்களையும் அறியாமையிலிருந்தும் விடுவித்து விடுவதற்கு அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டனர். கல்வி வந்து விட்டால் பிற பாக்கியங்களெல்லாம் தாமாகவே வந்துசேருமென்ற அபிப்பிராயத்தையே சோவியத் ருஷ்யத் தலைவர்கள் வரவேற்றனர். கல்வி எனப்படும் சிறந்த கருவியின் உதவி கொண்டே ஜன சமூகத்தைச் சீர்திருத்த முடியுமென்ற முடிவுக்கு ருஷ்யத் தலைவர்கள் வந்தனர். இத்தகைய மனோபாவத்தைக் கொண்டிருந்த ருஷ்யத் தலைவர்கள் பிரதேசங்கள் பல நூற்றாண்டுகளில் செய்யக்கூடிய வேலையைச் சில வருடங்களில் செய்து முடித்து விட்டனர். உலகம் தோன்றிய காலத்திலிருந்து வேறு எந்த தேசமும் சில வருடங்களில் ருஷ்யாவைப் போன்று கல்வித்துறையில் அபிவிருத்தி யடைந்து விடவில்லை. மனிதர்கள் உயிர்வாழ்வதற்கு ஆகாரம் எவ்வளவு அவசியமாகக் கருதப்படுகிறதோ அவ்வளவு தூரம் கல்வியும் அவசியமாக கருதப்பட வேண்டுமென்று ருஷ்யத் தலைவர்கள் தங்களுடைய நாட்டில் பிரசாரம் செய்தனர். அவர்கள் தங்களுடைய நாட்டின் பிரஜைகளின் கல்வி அபிவிருத்திக்காகச் செய்த வேலைகள் உலக சரித்திர நூலில் பொன்னெழுத்துகளில் பொறிக்கப்படத் தகுந்தவை.

ஸார் மன்னர்கள் ஆட்சி செலுத்திக்கொண்டிருந்த காலத்தில் ருஷ்யத்தொழிலாளர்கள் கல்வி கற்பதற்குச் சந்தர்ப்பங்களை பெறவில்லை. குடி அரசு கவர்ன்மெண்டை ஸ்தானம் செய்த ருஷ்யத்தலைவர்கள் முதன் முதலில் தொழிலாளர்களுக்கும், குடியானவர்களுக்கும் கல்வி கற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டனர். 1919ம் வருடம் டிசம்பர் மாதம் 26ம் தேதியன்று சோவியத் ருஷியாவின் முதல் குடியரசுத் தலைவராகிய லெனின் ருஷ்யாவின் எந்தப் பகுதியிலும் அறியாமையே இருக்கக் கூடாதென்று உத்தரவு பிறப்பித்தார். அவருடைய உத்தரவை நிறைவேற்றுவதற்கு குடியரசு சார்க்காரின் ஆயிரக்கணக்கான அதிகாரிகள் ஆர்வமாக முன் வந்தனர். 30 கோடி ஜனங்களுக்கு அதிகமாக வாழும் ருஷ்யாவைக் கல்வித் துறையில் அதன் தலைவர்கள் எவ்வாறு முற்போக்கு அடையச் செய்தனரென்பதை அறிந்து கொள்ள வேண்டுமானால் அவர்களின் கல்விப் பிரசாரமுறைகளை அறிந்து கொள்ள வேண்டிய தவசியமாகும்.

## தற்குறித் தன்மை ஒழிப்புப் பிரசாரம்.

சோவியத் சர்க்காரின் ஆதரவில் ருஷ்யாவெங்கும் தற்குறி ஒழிப்பு இயக்கம் தனிப்பட்ட நபர்களால் மிகவும் ஊக்கமாக் நடத்தப்பட்டு வருகின்றது தனிப்பட்ட நபர்களிற் பெரும்பாலர் இளைஞர்களாகவும், பொதுவுடமைக்கட்சியைச் சேர்ந்தவர்களாகவுமிருக்கின்றனர். அவர்கள் செய்து வரும் கல்விப் பிரசார வேலைகளை மேற் பார்வையிடுவதற்கு 'சுப்ரீம் கவுன்சில்' என்ற ஓர் சபை இருக்கின்றது. இச்சபை ஏற்படுத்தும் வேலைத் திட்டத்தைப் பின்பற்றுவதற்கு மகாசபைகளிருக்கின்றன. மாகாண சபைகள் தத்தம் மாகாணங்களில் கல்வி கற்காதவர்கள் எத்தனை பேர்களிருக்கின்றனரென்பதைக்கணக்கெடுத்து அவர்களுக்குக் கல்வி போதனைசெய்யும் மார்க்கத்தை 'சுப்ரீம் கவுன்சில்' எனப்படும் சபைக்கு அறிவிக்கின்றன.

அறியாமை ஒழிப்பு இயக்கத்தை நடத்தி வருபவர்களும், அதை ஆதரிப்பவர்களும் அதன் செலவுக்குப் போதிய பண உதவி செய்து வருகின்றனர். தொழிலாளர்களும், குடியானவர்களும் கூட தங்களுடைய சம்பளத்தின் ஓர் பகுதியை அறியாமை ஒழிப்பு இயக்கத்தின் நிதிக்குக் கொடுத்து உதவுகின்றனர். அறியாமை ஒழிப்புஇயக்கத்தின் ஜில்லா சபைகள் "படைகள்" என்றும் கல்வி போதனாசிரியர்கள் "இலக்கிய வீரர்கள்" என்றும் அழைக்கப் படுகின்றனர்.

நான் அறியாமை ஒழிப்பு இயக்கம் எவ்வாறு நடைபெறுகிறதென்பதைக் கவனிக்கும் பொருட்டு சிற்சில ஸ்தாபனங்களுக்கு விஜயம் செய்தேன் இளைஞர்களும், யுவதிகளும், கிழவிகளும், கிழவர்களும் மிகவும் ஆர்வமாகக் கல்வி பயின்று கொண்டிருந்ததைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன்.

## நான் கண்ட காட்சிகள்.

நான் மாஸ்கோ நகரில் தங்கிய போது ஒரு நாள் இரவில் ஒரு சிறிய கல்லூரிக்கு விஜயம் செய்தேன். 13 வயதிலிருந்து 24 வயதிற்குட்பட்ட மாணவர்களும், மாணவிகளும் இக் கல்லூரியில் கல்விபயின்று கொண்டிருந்தனர். நான் பிரவேசித்த வகுப்பில் சுமார் 50 மாணவர்களும் மாணவிகளுமிருந்தனர். 16 வயதுள்ள ஒரு மணவனே ஆசிரியரின் ஸ்தானத்தில் அமர்ந்திருந்தான். இதைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். வேறு இரு மாணவர்கள் ருஷ்ய பாஷையில் ஏதோ ஓர் அரிய விஷயம் பற்றி விவாதம் நடத்திக் கொண்டிருந்தனர். ஆசிரியர்களில் ஒருவர் பின் பக்கத்தில் ஓர் பெஞ்சியில் அமர்ந்து விவாதத்தை மிகவும் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தார். என்னுடைய வழிகாட்டி விவாதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷய மென்னவென்பதை என்னிடம் விளக்கமாகக் கூறினார்.

தற்குறி ஒழிப்பு இயக்கத்திற்கு ஆதரவளித்து வரும் ஆசிரியர்களிற் சிலர் மாணவர்களைப் பார்க்கிலும் வயதிற் குறைந்தவர்களாக இருக்கின்றனர். எனினும் அவர்கள் ஆசிரியர்களாக வேலை பார்ப்பதற்குத் தகுந்த பயிற்சி பெற்றிருக்கின்றனர். பயிற்சி பெறாதவர்களை சோவியத் சர்க்கார் ஆசிரியர்களாக ஒப்புக்கொள்வது கிடையாது.

கல்வி கற்பதற்கு வயது இவ்வளவுதானிருக்க வேண்டுமென்று வரையறுக்கப்படவில்லை. 16 வயதுள்ள சிறுவர்களிலிருந்து 60 வயதுள்ள கிழவர்கள் வரை எவர் வேண்டுமானாலும் சோவியத் ருஷ்யாவில் கல்வி கற்கலாம். கல்வி கற்றுக்கொள்வதற்குப்பணம் செலவழிக்க வேண்டியதில்லை. சர்க்கார் செலவிலேயே புத்தகங்கள் வாங்கிக்கொடுக்கப்படுகின்றன. பொருளாதாரம், அரசியல் முதலிய விஷயங்களும்கூட சிறுவர் சிறுமிகளுக்குப் போதனை செய்யப்படுகின்றன,

## மனதிற்கு ரம்மியமான புள்ளி விபரங்கள்.

தற்குறி ஒழிப்பு இயக்கம் சோவியத் ருஷ்யாவில் எந்த நோக்கத்துடன் ஆரம்பம் செய்யப்பட்டதோ, அந்த நோக்கம் அநேகமாக நிறைவேறிவிட்டது. கடந்த 15 வருடங்களில் சோவியத் ருஷ்யாவில் கல்வி எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்திருக்கின்றதென்பதைப் பின் வரும் புள்ளி விபரங்கள் நன்கு விளக்குகின்றன:—

| வருடம் | எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் |
|---|---|
| 1917 | 28.9 பர்சென்ட் |
| 1920 | 44.4 ,, |
| 1926 | 52.8 ,, |
| 1931 | 73.6 ,, |

தற்குறி ஒழிப்பை அகற்றுவதற்கு ஸ்தாபனம் செய்யப்பட்ட கல்லூரிகளில் கல்வி பயிலுபவர்களின் எண்ணிக்கை பிரதி வருடமும் அதிகரித்த வண்ணமாக இருக்கிறது. 1921—1922-ம் வருடத்தில் 456,000 பேர்களும், 1926-1927-ம் வருடத்தில் 1,554,000 பேர்களும், விசேஷ கல்லூரிகளில் வாசித்து வந்தனர். ஆனல் 1931—1932-ம் வருடத்தில் 13,631,000 பேர்கள் கல்வி பயிலத்தொடங்கினர்,

## குறிப்புகள்.

ருஷ்ய மக்கள் கல்வி கற்பதில் விசேஷ ஊக்கம் காட்டி வருகின்றனர். சோவியத் ருஷ்யாவின் முக்கியமான நகரங்களிலும் கிராமங்களிலும் ஆயிரக்கணக்கான புத்தக சாலைகளும், புத்தகக் கடைகளும், பத்திரிகாலயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இலக்கியம், ஓவியம், சிற்பம், விஞ்ஞானம் முதலிய சகல சாஸ்திரங்கள்

சம்பந்தமான தற்காலப் பிரச்னைகள் பற்றிப் புதிய நூல்கள் ருஷ்யாவில் வெளியாகிய வண்ணமாக இருக்கின்றன. அவை கல்வி கற்ற ருஷ்யர்களுக்கு அருமந்த விருந்துகளாக அமைகின்றன.

வீ.—கே.

குறிப்பு:— இந்தியாவின் கல்வி நிலைமையும், சர்க்கார் கல்வி நிர்வாக முறையும் அறிய விரும்பும் தோழர்கள் தோழர் ஈ. வெ. ராமசாமியின் ராஜத்துவேஷ வழக்குக்குக் காரணமான வியாசத்தையும் வழக்கு முடிவையும் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். ப-ர்

---

# எனது கனவு.

(தோழர் ப. ஜீவானந்தம்)

"அடைக்கலமே அடைக்கலமே" என்ற மெட்டு.

கனவுகண்டேன் கனவுகண்டேன்
களிக்கடல் மிதந்திடும் புதுக்குவலயங்கண்டேன் (கன)

அநுபல்லவி.

மன இருள்விழுங்கிடும் தினகரன் கண்டேன்
மதி ஒளிபரப்பிடும் புதுமுறை கண்டேன். (கன)

சரணங்கள்.

ஆண்டை அடிமையெனும் அலச்சொலங்கில்லை
ஆண் பெண் பேதம் பாரட்டும் அழிகிறுக்கில்லை
வேண்டும் சுயேச்சைப்பேச்சில் விதிவிலக்கில்லை
மீறுஞ் சட்டதிட்டங்கள் கூறுவோரில்லை (கன)

மனித சமாஜத்தார் வாழ்வினைக்கண்டேன்
மன்னும் அபேதவாத நன்னிலை கண்டேன்
புனித வாலிபக்காட்சி இனிதுறக்கண்டேன்
பொங்கும் போகபோக்யம் எங்கணுங்கண்டேன். (கன)

கடவுளைக் காத்திடும் கசடரங்கில்லை
கவைக்குதவாத மதக்கற்பனையில்லை
அடஞ்செயும் புரோகிதக்கடியரங்கில்லை
அநியாயப் பணக்காரச் சனியன்களில்லை (கன)

கவலையில்லா வாழ்க்கைச் சுவைமிகக்கண்டேன்
கருத்தில் துணிவில்யாவும் உருப்படக்கண்டேன்
நவநவமாக இன்பம் தவழ்வதைக் கண்டேன்
நாகரீக உச்சியில் நடனங்கள் கண்டேன் (கனவு)

---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பதை மறுக்க முடியாது. இப்பொறுப்பை மறுப்பதானால் கடவுள் இல்லையென ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகவே கிறிஸ்தவமதம் உண்மையானால் வைதீக வீட்டின் அடிப்படையாகவும், தெய்வீக சூழ்ச்சியின் மூலதத்துவமாகவும் உள்ள "மக்களை, கடவுள் வெறுக்கத்தக்கவர்களாகவே சிருஷ்டித்து, அவர்களில் சிலர் மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடையவே தன்னை பலியிட்டுக்கொண்டார்" என்று அறைதல் வேண்டும்.

இத்தகைய ஓர் திட்டத்தினால் உண்டாகும் அளவிட முடியாத ஞானத்தையும், மேலான அழகையும், உயரிய அன்பையும், கவனியுங்கள். இத்தகைய உயரிய நிலையை உணர உயர்ந்த மனித அறிவும், தவறிவிடும் எனக் காணமுடியாத கபோதியார்? இத்தகைய எல்லையற்ற அன்பின் பயனாய் உண்டாகும் சக்தியின் வேகத்தினை உணரமுடியாத அறிவிலியார்? இந்த உலகத்தினை நேசிப்பதின் காரணமாய் அனேகமாய் எல்லோரும் வெறுக்கத் தக்கவர்களாக செய்தமைக்காக கடவுளை முழங்கால் மண்டியிட்டு வணங்க ஒருப்படாத அத்தகைய அயோக்கியன் யார்? ஆ, நாம் உண்மையாகவே இவைகளை நம்பாதிருப்போமேயானால், தனது கருணையின் காரணமாய் நம்மை நரகிற்கு ஆளாக்குவதிலிருந்து தப்புவிப்பதற்கென்றே ஏற்பட்டுள்ள கோவில்களுக்குச்சென்று சேர்ந்து தொழ மறுப்போமேயானால் நாம் கடவுளிடம் அவமரியாதையாக நடந்து கொண்டவர்களாகவும், பிடிவாத குணமுடையவர்களாகவும் தப்பு வழியில் செல்பவர்களாகவும் தான் கொள்ளுதல் வேண்டும். ஆம், கடவுளால் ஆக்கப்பட்ட நரகத்திற்கு, மக்கள் செல்லாது, கடவுள் தடுக்கும் வேலையில் உதவியளிக்கும் ஒரே காரணம் தான், கோவில்இருப்பதற்கு சொல்லக்கூடும். கோவில்கள் காப்பாற்றும் ஸ்தாபனங்கள். அவை நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவதற்கு உறுதி கூறும் ஸ்தாபனங்கள். தலைமைக் காரியாலயம் மோக்ஷத்திலுள்ளது. கோவில்கள் இவ்வுலகில் உள்ள கிளை ஸ்தாபனங்களாய் ஒவ்வொரு தனி நபருக்கும் உறுதி கூறும் தேவ அதிகாரம் பெற்றதாய் விளங்குகின்றன. இத்தகைய உறுதிப்பாடுகள் இலவசமாக அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆயினும் இது பொய். இத்தகைய இலவச மோக்ஷ சாதனக் கதையைக் கட்டிய ஒருவன் உண்மையை மழுப்பும் ஓர் வீண் விளம்பரக்காரனாக இருத்தல் வேண்டும். உண்மை யாதெனில் மோக்ஷ சாதன திட்டத்தை பரிசீலனை செய்து பார்த்ததிலிருந்தும், அதற்குரிய விலை கொடுத்து பெற்றுக்கொண்டவர்களின் அனுபவத்திலிருந்தும் அது விலையேறப் பெற்ற ஒன்றாகக் கருதவேண்டியிருக்கிறது. ஒருவன் உண்மையாகவே இந்தத் திட்டத்தினால் காப்பாற்றப்படவேண்டுமெனக் கருதினால் தனது கடைசி நாள் தலைமை காரியாலயமாகிய மோக்ஷத்திலே வரவேற்கப்பட வேண்டுமென்று எண்ணினால் அடியில் கண்ட விலையை அவன் கொடுத்தாக வேண்டும். தனது எல்லையற்ற நல்லெண்ணத்தின் காரணமாய் மனித சமூகத்தின் அழிவை கடவுள் உண்டாக்கினார் என்ற நம்பிக்கையை அடையக்கூடிய அளவிற்குத்தனது பகுத்தறிவை மனிதன் இழந்துவிட வேண்டும், நாம் பிறப்பதற்கு வெகு காலத்திற்கு முந்தியே நம்மை கடைத்தேறச் செய்யவேண்டுமென்ற நன் நோக்கத்துடன் தன்னைத்தற்கொலை புரிந்துகொண்டார் என்ற அளவிற்கு நமது பகுத்தறிவை இழத்தல் வேண்டும். தனது எல்லையற்ற அன்பின் காரணமாய் நரகத்தை உண்டாக்கினார் என்பதை நம்பும்போது மனத்தாலும் அளவிட முடியாத கொடுமையை உடையவர் என்பதை மறந்துவிடல் வேண்டும். இவைகளன்னியில் சிறு குடிசைகளில் வாழும் உண்மை உழைப்பாளிகளான சமூகங்கள் கடவுளுக்குப்பெரும் கோவில்கள் கட்ட வேண்டும். இந்த லோகத்தில் கூலியாகாரமன்னியில் பள்ளி செல்லும் சிறுவர்களுடைய பெற்றோர் பரலோகத்தில் சுகம் கிடைக்கும் என போதிக்கும் கடவுளின் அர்ச்சகர்களை போஷிக்க வேண்டும். அல்லாமலும் நமது நம்பிக்கை ஒன்றுதான் நமது வழி ஒன்றுதான் மோக்ஷத்திற்கு அழைத்துச்செல்லும் என்று மாறுபட்ட நம்பிக்கையையும் வழியையும் கொண்டவர்களோடு முடிவற்ற போர் செய்துகொண்டிருக்கவேண்டும். நம்முடைய மார்க்கம் ஒன்றுதான், திட்டம் ஒன்றுதான் நாக வேதனையென்னும் நெருப்பிலிருந்து தப்புவிக்க செய்யும் என்று நம்பவேண்டும். ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையினால் தான் மோக்ஷ சாதனத்தை அடைந்து காப்பாற்றப்பட முடியும் என்ற குரூரமான எண்ணத்தினால் இன்றுவரை உலகில் நடந்து வரும் சகிப்பற்ற தன்மையையும் கொடூர செயல்களையும் கவனித்தால் இலவசமாக மோக்ஷ சாதனத்தை அடையலாமென்று சொல்பவன் பொருளின் விலையை நிர்ணயிக்கக் கூடிய அறிவற்றவன் என்றுதான் கொள்ளுதல் வேண்டும்.

நான் இதுவரை சொல்லிவந்த உறுதி சாசனங்கள் முன் கூட்டியே பெறுவிட்டாலும் பெற்று காலம் கடந்து விட்டாலும் சாவதற்கு முன்பாவது புதுப்பித்துக்கொள்ளலாம். இது மனித சமூகத்திற்கு ஓர் சௌகரியமான திட்டமாக இருப்பினும் மனித வர்க்கம் சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கும் ஓர் வழக்கத்தை உடையதாகயிருப்பதால் இந்த உறுதி சாசனத்தைப்பெற முடியாமலே முடிவடைந்து கடவுளின் முன்கொண்டு போகப்படலாம். கடவுள் என்னும் நெருப்பிற்கு சந்தர்ப்பம்என்னும் வழக்கத்தை அனுஷ்டிக்க முற்படுவது ஆபத்தாக முடியும்.

(தொடரும்)

(3ம் பக்கத் தொடர்ச்சி).

க்கு வேண்டிய அத்தியாவசிய பொருள்களை போதுமானவரை கிட்டாமல் செய்து வருவது.

மூன்றுவது மக்கள் வாழ்வுக்கு வேண்டிய பொருள்களை, பொதுவாக வினியோகித்து வரவொட்டாமல், சிலரே அப்பொருள்களைக் கையாண்டுவருதல். இம்மூன்று திட்டங்களால் (System) உயிர்போதுமான பொருள்களின்றி, குன்றிக்கொண்டு வருகின்றது. இம் மூன்று திட்டங்களை மாற்றி, உண்டாகும் பொருள்கள் யாவற்றையும் யாவருக்கும் சரிசமத்துவமாக உதவும்படி செய்வதுதான் சோஷியலிஸ்ட் மார்க்கமென்பார். நவீன வாழ்வு, உலகில் பரவ வேண்டுமானல்; பஞ்சம், வறுமை, நோய், இல்லாமை, போர், மாற்சல்யம் உலகினின்று அகற்றப்பட வேண்டுமானல், சோஷியலிஸ்ட்மார்க்க மொன்றே உளது. இந்த மார்க்கத்தை விட்டு, வேறு எந்த வழியிலும் உலக சுக போகத்துக்கு இடமில்லை. முதலாவது, லாபத்திற்காகவே, எந்த உலகப் பொருள்கள் யாவும் சொந்தமாக்கப்பட்டு வருகின்றன. உபயோகத்திற்கென்றல், எந்தப் பொருளையும், எவனும் சொந்தமாக்கமாட்டான். உலகில் விளையும் புல்லை எடுத்துக்கொள்வோம். மிருகங்கள், எந்த உலகிலும், விளையும் புல்லையாகிலும், அல்லது, நிலங்களையாகிலும் சொந்தமாகக் கருதி, விற்பனை செய்வதில்லை. விளைந்த புல்லை, புல்லைத் தின்னும் சிவவகை யாவும் போதுமானவரை தின்கின்றன. போதாமற்போனல், எல்லாம் பட்டினி கிடக்கின்றன. ஒரு மிருகம், விளையும் புற்களைத் தானே தின்பதில்லை. இம் மாதிரியாக, எல்லா உலகப் பொருள்களும் மிருகங்களில் உபயோகப்பட்டு வருகின்றன. முக்கியமாக கூட்டுறவு மிருகங்களில் இந்த பொது உபயோகத் திட்டத்தைப் பார்க்கலாம். அதுபோலவே, மக்கள் யாவரும் பொதுவுடமைத் திட்டத்தைக் கையாடினல், உயர்வு தாழ்வென்றும், உடையவன்-இல்லாதவன்என்றும், முதலாளி-தொழிலாளி என்றும் இந்த இன வேற்றுமை உலகில் இருக்கா.

லாபத்தை வைத்துக்கொண்டு, எந்தப் பொருளையும் சரி சமத்துவமாக அனுபவிக்க முடியா. நிலத்தைப் பொதுவாக உழுது, பொதுவாக விரைத்து, பொதுவாகப் பயிர் செய்து, அதன் பலனை பொதுவாக அனுபவித்தால் தான், இல்லாமை (Want) பல கோடி மக்களுக்கு இல்லாமலிருக்கும். "சொந்தம்" என்ற கற்பனையால், நிலத்தின் பலனை கையாண்டு வருவதால், சிலருக்கு அதிகமும், பலருக்குக் குறைவும் உண்டாகின்றது. பலரின் உழைப்பு, சொந்தமென்ற கற்பனைச் சொல்லால், உழைத்தவனுக்கு உதவாமற் போகின்றது. இந்த "சொந்தம்" என்ற சொல்லை மாற்றி, "உபயோகம்" என்ற சொல்லை வழக்கத்தில் கொண்டுவந்தால் தான், உலக வறுமை நீங்கும். "சொந்தம்" உலகில் வழங்கும் வரை, அல்லது சொந்தமென்ற பழக்க திட்டம், உலகில் நிலவும்வரை, ஜன நாயகத்தாலும் சரி, முதலாளித் திட்டத்திலாகிலும் சரி, பாசிசம் ஆனலும் சரி அல்லது, அமெரிக்கா சீர்திருத்தமானலும் சரி, எந்தவித மார்க்கத்தாலும், உலகம் பசிப்பிணி, தள்ளாமையால் வருந்தியே கிடக்குமென அறிக.

ஒரு வருஷ காலமாக, அமெரிக்க நாட்டில் பசிப்பிணியைப் போக்க சில மார்க்கங்களைத் தேடி வருகின்றனர். இதனை Recovery Drive, அதாவது சீர்திருத்த முயற்சி என்று வழங்குவார்கள். இதன் முக்கிய அம்சங்கள் என்னவெனில் முதலாக வேலை இல்லதாருக்கு வேலை கொடுக்கவேண்டும். ஜீவனத்திற்கு போதுமான வருமானம் கொடுக்கும்படி செய்ய வேண்டும், நின்ற வேலைகளை துவக்க வேண்டும். செலவிடாத பணத்திற்கு, செலவு தேட வேண்டும். விலைபடாத சமான்களை விலைபடச் செய்ய வேண்டும். இந்த சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டி வந்த காரணம் என்னவெனில், மகாயுத்தத்தில் அமெரிக்கா முதலாளிகள் திரண்ட செல்வத்தைக்குவித்து வைத்துக்கொண்டார்கள். இவ்வளவு பணமும் அயல் தேசங்களிலிருந்து பலவிதங்களில் அமெரிக்காவுக்கு வந்து குவிந்தது. வெளி ஊர்களில் பணமில்லாத தோஷத்தால், அமெரிக்க சரக்குகளை வாங்கவோ, அல்லது அந்த ஊர்களில் கடன் வாங்கவோ முடியாமற்போயிற்று. சரக்குகள் விலைபடாமையால், விற்கப்படாமல், தொழிற்சாலைகளில் குவிந்தன. சரக்கு இருப்பில் இருந்து வந்தபடியால், புதிய சரக்குகள் செய்ய முடியவில்லை. சாமான்கள் செய்ய முடியாதபடியால், சாலைகள் மூடப்பட்டன. சாலைகள் மூடப்படவும், பாங்கில் குவிந்து கிடக்கும் பணத்திற்கு, செலவு இல்லாமற் போயிற்று. உழைப்போருக்கு வேலை இல்லாமற் போயிற்று. வாங்குவார் அற்று சரக்குக்கு விலை குறைவு நேரிட்டது. ஆனல், வாங்குவதற்கு, உழைப்பாளிகளுக்குப் பணமில்லை பணமிருந்தும் பாக்கியமிருந்தும் அமெரிக்கருக்கு உண்ண உணவு இல்லாமற் போயிற்று! பத்து பதினைந்துகோடி மக்கள், திரிசங்கு சொர்க்கத்தில் ஆழ்ந்தனா!! ஒரு கோடி பன்னிரு லட்ச உழைப்பாளிகளுக்கு வேலையில்லாமல், தெருக்களில் திரிய வெளிப்பட்டனர். விளைந்த விளைவு, வயல்களில் அம்பார அம்பாரமாக குவிந்தது. விவசாயிகளுக்கு லாபமின்றி, நிலங்களை காம்பில் வைத்துவிட நேரிட்டது. கோடிக்கணக்கான விவசாயத் தொழிலாளருக்கு வேலை இல்லாமல் போயிற்று. இது என்ன விபரீதம்! இந்த விபரீதத்திற்கு வழி என்னவென்று யோசித்தார்கள். குவிந்து கிடக்கும் சரக்கை அழித்து விட்டால், விலை ஏறுமென்று பார்த்தார்கள். சரக்கு அழிந்ததே யொழிய, மீதி சரக்கை வாங்குவார் இல்லை. வாங்கும்படியாக, தொழிற்சாலைகளில் உழைப்பவர்களுக்கு சம்பளங்களை உயர்த்த, காகித சிலாமணியை அதிகப்படுத்தினர்கள். சம்பளம் உயர்வும், சரக்குகளுக்கு விலை ஏறியது. விலை ஏறவும், மூடப்பட்ட சாலைகள் திறக்கப்பட்டன. ரயில்களுக்கும், கப்பல் வர்த்தகங்களுக்கும் அதிக வருமானம் கிடைக்க ஆரம்பித்தது. ஆனல், முதலாளி எவ்வளவு நாள் காகித நோட்டுகளை நம்பி இருக்க முடியும்? எத்தனை நாள், குறைந்த லாபத்துடன் இருக்கமுடியும்?

விளைவு விலைபடாத விவசாயிகளுக்கு, நஷ்ட ஈடு செய்ய ஆரம்பித்தனர். அவர்களைக்குறைவாக பயிர் செய்யச் செய்தனர். ஆனல், கோடிக் கணக்கான விவசாயத் தொழிலாளருக்கு, வேலை இல்லாமற் போயிற்று. நஷ்டஈடு நிலச்சுவான்கள் சேபியில் விழுந்தது! உழைப்பவர் வயிற்றில் மண் வந்து விழுந்தது!! சரக்குகள் இல்லாமையால், அதன் விலை உயர்ந்தது. ஆனல், விலை உயர்ந்த சாமான்களை, வாங்குவதற்கு போதிய சம்பள உயர்வு இல்லை. இந்த Vicious Circle என்ற தோஷத்தில், முதலாளி திட்டத்தை சீர்படச் செய்யும் முயற்சி, அமெரிக்கருக்கு வந்துவிட்டது. திரும்பத் திரும்ப, இருந்த நிலைக்கே வருங்கேட்டை, Vicious Circle தோஷமென்று, ஆங்கிலத்தில் கூறுவர். இந்தக்கேட்டைக்கவனித்துவரும் ஒரு அறிஞர், "அமெரிக்கர் நிலமை உண்மையில் சீர்படவேண்டுமானல், பொதுவாக சகலருக்கும் உதவும்படி ஒரு திட்டத்தை உண்டாக்கவேண்டும். அந்த திட்டத்தை சொந்தம் என்ற சொத்தைக்கொண்டும், அல்லது, லாபம் என்ற நோக்கத்தைக் கொண்டும், நிறைவேற்றமுடியாது." செய்பொருளும், விளைபொருளும் எல்லோருக்கும், சரிசமத்துவமாக வினியோகிக்கப்படும் திட்டமேதுவோ, அந்தத் திட்டத்தின்மேல் தான் மனித புதிய வாழ்க்கையைக் கட்டப்படவேண்டும்.

பெண்ணுரிமைக் கீதங்கள்.
தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் கடலூர்சிறையில் இயற்றியது.
விலை அணு 0—1—0.
கிடைக்குமிடங்கள்:—
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.
R. கிஸன், கோவை.

சமதர்மக் கீதங்கள்.
தோழர் ப. ஜீவானந்தம் இயற்றியது.
விலை பை. 6.
கிடைக்குமிடங்கள்:—
குடிஅரசு பதிப்பகம் ஈரோடு.
சமதர்மக் காரியாலயம் ஜோலார்பேட்டை

முந்துங்கள்! முந்துங்கள்!!
இங்கிலீஷ் பாஷை பேச, வாசிக்க, எழுதத்தெரியுமா?
கடந்த 13 வருஷகாலமாய் தபால் மூலம் கற்றுக்கொடுக்கப்பட்டுவரும் நமது ஸ்பெஷல் மெட்ரிக்குலேஷன் கோர்ஸ்களை மாதா மாதம் சொற்ப தொகை அனுப்பி படிக்கலாம். விரும்பினல் சர்க்கார் பரீக்ஷைகளுக்கும் போகலாம். புது லிஸ்ட் ஆரம்பித்து விட்டது. விபரத்திற்கு ஸ்டாம்பு அனுப்பவும்.
அன்டைப்பன்ஸ் காலேஜ்,
ஆறுமுகனேரி S. I. R.

கொடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னர்குடி
யானைக்கால் குஷ்டம்
ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்.
யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ண டெண்டல்பாம் பற்பொடி 2½ அணு.

## பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுகட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B.A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துககாட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட்ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

### மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

### கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது விலை அணா 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பேர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது எனபதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

### பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### குடி அரசு கலம்பகம்.

இந்நூலில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தபின் குடி அரசில் எழுதிய தலையங்கங்களையும், பல மகாநாடுகளில் பேசிய பேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

### பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

இது பாவ மன்னிப்பின் பேரால் நடந்து வந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி செனிக்யூ அவர்கள் தன் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப் படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோசனகளும், உள் எண்ணங்களும், பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

### பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் தத்துவத்தையும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3

### மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இந் நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது விலை அணா 3.

### "மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

இந்நூல் சென்னை தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் குடி அரசில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை தொகுத்ததாகும். இதில் நோயும் கடவுள் சக்தியும், மந்திரத்தால் நோய் தீருமா? மதங்களால் ஏதேனும் பயன் உண்டா?, மூட நம்பிக்கையின் கொடுமை என்பதுபோன்ற பல அறிய விபரங்களைக்கொண்டதாகும். சுமார் 128 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 6.

இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

### நான் நாஸ்திகன் ஏன்?

இப் புத்தகமானது தோழர் பகத்சிங்கு அவர்கள் தான் எவ்வாறு நாஸ்திகரானார் என்பது பற்றியும் ஏன் நாஸ்திகரானார் என்பது பற்றியும் லாகூர் சதி வழக்கு விசாரணைக்காலத்தில் சிறையிலிருக்கும்போது எழுதியதாகும். அருமையான கருத்துக்களும் தெளிவான உதாரணங்களும் கொண்டது. விலை அணா 3.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

## பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடி போல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்த தலைமையுரையை ஒன்றாகத்திரட்டியதாகும். சமூக சீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் கையில் ஒவ்வொன்றுமிருக்க வேண்டியதவசியமாகும்.

விலை அணா 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னாஷா அவர்கள் அமெரிக்காவைப் பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும்.

விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டவையாகும்.

விலை அணா ½.

## மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

## சோதிடப் புரட்டு

விலை அணா 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா ½.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.